வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 239 | பக்கங்கள் : 20


07 மீண்டும் ராகுல் காந்தி: பா. ஜ. க. முகத்தில் கரி?


08 தமிழ்க்கட்சிகள் மீது ஜனாதிபதி முன்வைக்கும் குற்றச்சாட்டு!


09 13 பிளஸ் 13 மைனஸாக இந்தியா பார்த்திருக்க மாறுகிறது!


10 13 தொடர்பாக தமிழர் தரப்பின் அணுகுமுறைகளில் மாற்றம் அவசியமா?

# தமிழர் பாதுகாப்பை உறுதிப்படுத்த கூட்டாக இந்தியாவிடம் கோருங்கள்!

## தமிழ்க் கட்சிகளிடம் மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 06

தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, தமிழ் கட்சிகள் கூட்டாக இந்தியாவிடம் வலியுறுத்தவேண்டும் என்று மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு-கிழக்கு சிவில் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் இணைப்பாளர்கள் ஆ.யதீந்திரா, எஸ். மகாலிங்கசிவம் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் -

19



பறாளாய் அரச மர விவகாரம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் சுழிபுரத்தில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 06

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை நாட்டிய மரம் என வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி மீளப் பெறப்படவேண்டும் என தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சுழிபுரத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தை தொடர்ந்து சுழிபுரம் சந்தியில் இருந்து பறாளாய் முருகன்

19

## “சங்கமித்தை வரவும் இல்லை அரச மரத்தை நடவும் இல்லை”




யாழ்ப்பாணம், ஒக. 06

பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை தொல்லியல் அடையாளமாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராகவும் தமிழர் பகுதியில் தொல்லியற் திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் சங்கானை பஸ் நிலையத்துக்கு

19

ஜனாதிபதித் தேர்தலில்

## ரணிலுக்கு ஆதரவு கோரி மைத்திரிபாலவுடன் பேச்சு

கொழும்பு, ஒக. 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணிக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் குமார் வெல்கம ஆகியோருடன்

19

## இலங்கை அரசின் திட்டங்களில் இந்திய தனியார்துறை முதலீடு!

தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு

புதுடில்லி, ஒக. 06

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புதிய பொருளாதார ஒத்துழைப்புக்கான கடல் சார், எரிசக்தி மற்றும் நிதி இணைப்புகள் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் முக்கிய நகர்வாக அமையும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும்

19



## ‘யாழ்நிலா’ ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, ஒக. 06

கல்கிஸையிலிருந்து காங்கேசன்துறைக்கான ‘யாழ்நிலா’ சொகுசு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் நேற்று முன்தினம் இரவு முதல் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் என்.ஜே.இடிபோலகே தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை ஆரம்பித்து வைத்தார்.

பிரதி சனிக்கிழமைகளில் இரவு 10 மணிக்கு கல்கிஸையில் இருந்து காங்கேசன் துறை நோக்கி

19

## 2010 இற்கு பின்னர் வடக்கு - கிழக்கில் 83 இடங்களில் விகாரைகள் அமைப்பு




சிறிதரன் எம்.பி. தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 06

2010ஆம் ஆண்டுக்குப் பின் வடக்கு-கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர். உண்மையைச் சொன்ன வரலாற்றாசிரியர்களை புறக்கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

19



## இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறை!

இஸ்லாமாபாத், ஒக. 06

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளதாக

19

## நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமில்லை

பொது பயன்பாடு ஆணைக்குழு மின்சார சபைக்கு பதிலடி

கொழும்பு, ஒக. 06

நியாயமற்ற முறையில் இலாபமீட்ட இடமளிக்க முடியாது என இலங்கை மின்சார சபைக்கு பொது பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மின் கட்டணத்தை

19

# இப்படியும் நடக்கிறது

நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை புரிந்துகொள்ள அதற்காக தனியாக படிக்கவேண்டும் போல இருக்கின்றது.

அரசமைப்புச் சட்டத்தில் இருப்பவற்றை ஒரு நிறைவேற்று ஜனாதிபதியாக அமுல்படுத்த வேண்டியது தனது கடமை என்றும், அரசமைப்பிலுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் பாராளுமன்றத்தில் அறிவித்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறு அறிவித்தபோது, பதின்மூன்றுக்கு நீங்கள் ரெடியா? என்று ஒவ்வொருவராக விழித்து கேட்டது நேற்றுப்போல இருக்கின்றது.

பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் ஆற்றிய அந்த வரலாற்று சிறப்புமிக்க கருத்தை பலரும் விதந்துரைத்தனர். அரசமைப்பில் உள்ள அந்த பதின்மூன்றை தான் அமுல்படுத்தப்போவது போலவும், யாராவது அதனை விரும்பவில்லை என்றால் அரசியலமைப்புக்கு திருத்தத்தைக் கொண்டு வந்து பாராளுமன்றில் நிறைவேற்றலாம் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அப்படி யாரும் திருத்தத்தைக் கொண்டுவரப்போவதில்லை என்ற துணிச்சலில் அவர் அப்படி சொல்வதாக பலரும் அப்போது நினைத்துக்கொண்டனர்.

ஆனால் அப்படியல்ல, யாராவது திருத்தத்தைக் கொண்டு வாருங்கள் என்று அவர் அழைப்பு விடுத்ததாகவே இப்போது புரிந்துகொள்ள முடிகின்றது.

சில மாதங்கள் அவ்வவ்போது தமிழ்க் கட்சிகளுடனும் தமிழரசுடன் தனியாகவும் சந்தித்த பின்னர், கடைசியாக இந்தியாவுக்கு செல்வதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னதாக பொலிஸ் அதிகாரத்தை எக்காரணம் கொண்டும் தரமுடியாது என்று அறிவித்ததுடன், அரசியலமைப்பிலுள்ள அந்த பதின்மூன்றை அமுல்படுத்துவதற்கும் பாராளுமன்றமே முடிவு செய்யவேண்டும் என்றும் அறிவித்திருந்தார்.

இப்போது கடைசியாக, பதின்மூன்றை அமுல்படுத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சிகளிடமும், தனித்தனியாக யோசனை கேட்கப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றில் இடம்பெற்றிருக்கும் கட்சிகளில் பெரும்பாலானவை பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதை விரும்பாத கட்சிகள். பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவோம் என்று அறிவித்த சுதந்திரக் கட்சிகூட கடைசியாக பொலிஸ் அதிகாரத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றது.

ஆக, மொத்தத்தில் பதின்மூன்றிலுள்ள பல விடயங்களை பாராளுமன்றத்தின் உதவியுடன், இல்லாமல் செய்ய ரணில் திட்டமிட்டுவிட்டது தெளிவாகியிருக்கின்றது.

முதலில் பதின்மூன்றை எமது தொடக்க புள்ளியாகக்கூட கருத மாட்டோம் என்று சொன்ன தமிழ்த் தேசியக் கட்சிகள், பின்னர் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தக் கோரின. அதற்காக இந்தியப் பிரதமரின் உதவியையும் கோரின.

கடைசியாக நடந்த தமிழ்க் கட்சிகளுடனான பேச்சில் பொலிஸ் அதிகாரத்தை தரமுடியாது என்று ஜனாதிபதி சொன்னபோது, அதனை ஏற்கமுடியாது என்று சொன்னது தமிழரசுக் கட்சி.

ஆனால் அதற்கு பின்னர் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எல்லா அதிகாரத்தையும் பெறுவது பின்னர் பார்க்கலாம், முதலில் மாகாண சபைகளுக்கு தேர்தல்களை வையுங்கள் என்றது அதே தமிழரசு கட்சி.

இப்போது எல்லோருடைய கோரிக்கையும் மாகாண தேர்தல் என்ற அளவுக்கு சுருங்கிவிட்டது. ஆனால், ஜனாதிபதியோ முதலில் ஜனாதிபதித் தேர்தல், பிறகு பாராளுமன்றத் தேர்தல், அதன் பின்னரே மாகாணசபைக்கான தேர்தல் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

அதுவல்ல இன்று பிரச்னைக்குரியது. முதலில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படி சிங்கள வாக்குகளைப் பெறலாம் என்று கணக்குப் போட்ட ஜனாதிபதி, பதின்மூன்றிலிருந்து எதையெதையெல்லாம் பிடுங்கி எடுக்கலாம் என்பதில் தெற்கு கட்சிகளின் ஆலோசனையை இப்போது கோரியிருக்கிறார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது தமிழ் மக்களுக்கும் அரசுக்குமுரிய ஒப்பந்தம் ஒன்றின் மூலம் வந்ததல்ல. அது இரண்டு நாடுகளுக்கிடையில், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பலனாக வந்தது. அதில் கை வைப்பது என்பது நடைமுறைக்கு சாத்தியமானதா என்பது தெரியவில்லை.

ஆனால், அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது, தமது ஆயுதங்களை இந்தியாவிடம் ஒப்படைத்துவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இன்றுள்ள பல அரசியல் கட்சிகள். அவர்கள் ஆயுதங்களை இந்தியாவிடம் ஒப்படைத்தபோது தமிழர் பிரச்னைக்கு தீர்வாக இந்தியாவால் முன்வைக்கப்பட்டது இந்த பதின்மூன்று. இதில் இலங்கை அரசு கை வைத்தால், அதனை தடுக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பும் இந்தியாவுக்கு உண்டு.

அதனை இந்தியாவிடம் ஞாபகப்படுத்தவேண்டியது, அன்று ஆயுதங்களை ஒப்படைத்த இயக்கங்களுக்கு உண்டு.

வடக்கில் உள்ள மூன்று தீவுகளில் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு முதலிட சீனா முன்வந்தபோது, அதற்கு எதிர்வினையாற்றிய இந்தியாவின் நெருக்குவாரங்களால் அந்தத் திட்டத்தை சீனா கைவிடவேண்டியேற்பட்டது. இப்போது இந்திய உதவியுடன் அந்த திட்டத்தை தொடங்குவதற்கான கேள்வி கோரல் வெளிவந்திருக்கின்றது.

ஒருபுறம் இந்தியாவை சமாதானப்படுத்திக்கொண்டு மறுபுறத்தில் இந்திய ஒப்பந்தத்தை மீறுகின்ற முயற்சியையும் இலங்கை தொடங்கியிருக்கின்றதோ என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்கமுடியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# பெரமுனவுக்குள்ளிருந்து ஆட்களை உருவி எடுக்கிறார் லான்சா எம்.பி!

*கொழும்பு, ஓக. 06*



பொதுஜன பெரமுனவின் முன்னணி தலைவர்களுக்கும், அந்த அணியிலிருந்து பிரிந்து தற்போது ரணில் ஆதரவாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல் அரசியல் நெருக்கடியாக உருவாகி வருவதாக அறிய முடிகிறது.

பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள ஒரு குழுவினரை இழுத்தெடுத்து, பெரமுனவில் அதிருப்தியடைந்து வெளியேறியவர்களையும் இணைத்து, புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்க முயற்சித்து வருவதே நெருக்கடிக்கு காரணமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னணியிலேயே நிமல் லான்சா இந்த நகர்வை மேற்கொள்வதாக ஊகிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இது தொடர்பில் அதிருப்தி தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுஜன பெரமுனவில் உள்ள சில எம்.பிக்கள் அதிருப்தியடைந்து வெளியேற முடிவு செய்துள்ளதன் பின்னணியில் நிமல் லான்சா எம்.பி சம்பந்தப்பட்டிருப்பது கட்சிக்கு சிக்கலாக மாறியுள்ளதாக பசில் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிய அமைச்சர்களான அநுர பிரியதர்சன யாப்பா, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, பிரியங்கர ஜயரத்ன, சுசில் பிரேம ஜயந்த மற்றும் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஒரு குழுவினரை ஒன்றிணைத்து இந்த புதிய கூட்டணியை கட்டியெழுப்புவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா செயற்பட்டு வருகின்றார்.

சுதந்திரக் கட்சியில் இருந்தும் மஹிந்த அமரவீர, நிமால் சிறிபபால டி சில்வா, ரஞ்சித் சியம்பலபிட்டிய உள்ளிட்ட ஒரு குழுவினரையும் இணைத்து, சுமார் 50 வரையான எம்.பிக்களை கொண்ட குழுவாக இந்த அரசியல் கூட்டணியை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படியே லான்சா செயற்படுவதாகவும், அவருக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து அலுவலகம் மற்றும் பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# விவசாய அமைச்சரின் வீட்டுக்கு பேரணியாக சென்ற விவசாயிகள்

*கொழும்பு, ஓக. 06*

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வீட்டின் முன்பாக நேற்று முன்தினம் முற்பகல் ஒன்றுகூடிய வளவ வலய விவசாயிகள் தமது செய்கைகளுக்குத் தேவையான நீரை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அநுராதபுரம் - அங்குனுகொலபெலஸ்ஸ நகரத்தில் நேற்று முன் தினம் முற்பகல் விவசாயிகளின் எதிர்ப்பு பேரணியொன்று ஆரம்பமானதுடன், மகாவலி அரச விவசாயிகளின் ஒன்றியமும் அகில இலங்கை விவசாய சம்மேளனமும் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தன.

சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்திற்கு உடனடியாக நீரை விநியோகிக்குமாறு இதன்போது விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

விவசாய அமைச்சரின் வீட்டை நோக்கிப் பேரணி முன்னெடுக்கப்பட்டபோது, அமைச்சர் வீட்டில் இல்லை என தெரிவித்து பொலிஸார் பேரணியை தடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வீதியில் கலந்துரையாடல் நடத்தியதை அடுத்து விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதனிடையே, வளவ விவசாயிகள் எம்பிலிப்பிட்டிய நகரில் நேற்று முன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எம்பிலிப்பிட்டிய நகரில் விவசாயிகள் முன்னெடுத்துள்ள சத்தியாகிரகப் போராட்டம் நேற்று 13 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# யூரியாவுடன் கொழும்பு வந்தது கப்பல்

*கொழும்பு, ஓக. 06*

18 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்துடன் கப்பலொன்று நேற்று முன்தினம் இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிதியுதவின் கீழ் குறித்த உரம் வியட்நாமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

உரத்திற்காக விவசாயிகள் மத்தியில் அதிக கேள்வி நிலவுவதால் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# அவசர அழைப்புப் பிரிவுடன் விளையாடினால் தண்டனை

*கொழும்பு, ஓக. 06*

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு (119) பொய்யான மற்றும் தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்தகைய குற்றத்தில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட ஒரு நபருக்கு 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்று சட்ட விதிகள் இருப்பதாக பொலிஸ் திணைக்களம் தெரிவிக்கிறது.

அவசர அழைப்பு பிரிவுக்கு நாள் ஒன்றுக்கு 3000 முதல் 3500 செய்திகள் வருவதாக பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் வரும் செய்திகளை ஆய்வு செய்யும் போது, பொதுமக்கள் 119 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி தவறான தகவல்கள் அடங்கிய செய்திகளை அனுப்புவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, மிகவும் முக்கியமான மற்றும் அவசரமாக செயலாக்கப்பட வேண்டிய தொலைபேசி செய்திகளை செயலாக்குவதில் சில இடையூறுகள் அல்லது தாமதங்கள் ஏற்படக்கூடும் என்று பொலிஸ் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்த எண்ணை தவறாக பயன்படுத்த வேண்டாம் என்றும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய சம்பவங்கள் குறித்தும், முன்னுரிமை மற்றும் தேவையான தகவல்களை வழங்க மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் பொலிஸ் திணைக்களம் பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளது.

# பொதுஜன பெரமுன வேட்பாளராக பசில்!

காமினி லொக்குகே கூறுகிறார்

கொழும்பு, ஓக. 06

**அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன வேட்பாளராக பசில் ராஜபக்ச களமிறக்கப்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு கட்சி என்ற ரீதியில் பாராளுமன்றத்தின் ஊடாகவும் ஒத்துழைப்பு வழங்குகிறோம். சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை சிறந்த முறையில் வெற்றி கொள்வோம்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே வேட்பாளராக களமிறக்குவோம். முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படலாம்-என்றார். (அ)



# எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்

கொழும்பு, ஓக. 06

பாராளுமன்றம் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை கூடவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் கடந்த ஜூலை 21ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டு வரப்படும் பிரேரணைக்கமைய 2023ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

9ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், 5 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு வேளையின்போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார பிரச்னைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை தனியாள் உறுப்பினர் பிரேரணைகள் பிரேரிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்கோ நிறுவனத்தினால் பண்ணையாளர் கௌரவிப்பு!



யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் செயற்படும் யாழ்கோ நிறுவனத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்கோ நிறுவன பண்ணையாளர்கள் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு திருநெல்வேலியில் உள்ள விவசாய திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்கோ நிறுவனத்தின் தலைவர் திருமதி மோகனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் கலந்துகொண்டதோடு சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் , வடமாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களபணிப்பாளர் வைத்தியர் சிவகுருநாதன் வசீகரன், நல்லூர் பிரதேச செயலர், ஆகியோர் கலந்துகொண்டு பண்ணையாளர்கள் பணியாளர்களை கௌரவித்தனர்.

கடந்த 20 வருட காலமாக யாழ்கோ நிறுவனத்துடன் தொடர்பை பேணிவரும் 50இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (அ)

# அலி சப்ரி ஈரானுக்கு விஜயம்

கொழும்பு, ஓக. 06

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஈரானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஈரானின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியானின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் ஈரானுக்கு விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாளை வரை அங்கு தங்கியிருப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் ஈரான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுடன் அவர் சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

ஈரானின் அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் நிறுவனத்தில் வெளிவிவகார அமைச்சர் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்திக்கவுள்ளார். (அ)

# தாடி வைத்திருந்ததால் தடுக்கப்பட்ட கிழக்கு பல்கலை மாணவனை பரீட்சைக்கு தோற்ற அனுமதித்த நீதிமன்று!

கொழும்பு, ஓக. 06

தாடி வைத்திருந்ததன் காரணமாக விரிவுரைகள் மற்றும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடை விதிக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர் ஒருவரை பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அப்துல் ரஹீம் மொஹமட் என்ற மாணவர் சமர்ப்பித்த ரிட் மனுவை விசாரணைக்கு எடுத்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த மனு தொடர்பில், பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்குமாறு நீதிபதி அழைப்பாணை அனுப்பியுள்ளார்.

மாணவன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றில் முன்னிலையாகியபோது, தமது கட்சிக்காரர் கிழக்குப் பல்கலைக்கழக தாதியர் பீடத்தின் இறுதியாண்டு மாணவர் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சட்டத்தரணி குறிப்பிடுகையில், அவர் ஒரு முஸ்லிம் மற்றும் தாடியுடன் இருப்பதால் விரிவுரைகள் மற்றும் பரீட்சைகளுக்குச் செல்ல பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.

பரீட்சை மற்றும் விரிவுரைகளுக்குத் தோற்றுவதற்கு அவசியமானால் தாடியை மழிக்குமாறு நிர்வாகம் தனக்கு அழுத்தம் கொடுத்ததாக அவர் கூறினார்.

மனுதாரர் இஸ்லாம் மதத்திற்கு மாறியவர் என்றும், அவர் மத நம்பிக்கையின்படி தாடி வளர்த்தவர் என்றும், அதை அகற்ற உத்தரவு பிறப்பிக்க பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றும் சாலிய பீரிஸ் கூறினார்.

பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் இவ்வாறானதொரு சட்டத்தை விதிக்க பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அதிகாரம் இல்லை எனவும், குறித்த மாணவர் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கும் போது அவ்வாறானதொரு ஒழுங்குமுறை இருக்கவில்லை எனவும், கடந்த வருடம் இவ்வாறான சட்டத்தை அமுல்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தினார்.

இதனால் அவரது மத நம்பிக்கைகள் மற்றும் அவரது கல்வி வாழ்க்கை கடுமையாக தவறான எண்ணத்துக்கு உள்ளானது. இதனால் இம்மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள பல்கலைக்கழகப் பரீட்சைக்கு தனது கட்சிக்காரருக்கு தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வாதிட்டார்.

ஒழுக்காற்று தீர்மானத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

குறித்த பல்கலைக்கழகத்தில் உள்ள ஏனைய இஸ்லாமிய மாணவர்களும் இச்சட்டத்திற்கு அமையவே செயற்பட்டு வருவதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

பல்கலைக்கழகம் எடுத்த இந்த தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதை தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாகவும் அரச சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இருதரப்பும் முன்வைத்த உண்மைகளை பரிசீலித்த நீதிபதி, மனுதாரர் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கும்போது அவ்வாறானதொரு சட்டம் பல்கலைக்கழகத்தினால் இயற்றப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

அதையும் மீறி கடந்த ஆண்டில் இவ்வாறு சட்டத்தை திணிப்பதன் மூலம் பாதகமான நிலை ஏற்படும் என நீதிபதி குறிப்பிட்டார். (அ)

# அமைச்சுப் பதவியை துறக்கிறார் ரொஷான்?

கொழும்பு, ஓக. 06

"விவசாயிகளுக்காக அமைச்சு பதவியைக்கூட துறப்பதற்கு தயாராகவே இருக்கின்றேன்." - என்று நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

"இலங்கையென்பது விவசாய நாடு, இதனை எவரும் மறந்துவிடக்கூடாது. எனவே, விவசாயத்துக்குரிய நீரை வழங்குவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக நீர் வழங்கலின்போது முதலில் குடிதண்ணீருக்கும், இரண்டாவது விவசாயத்துக்குமே வழங்கப்பட வேண்டும். அதன்பின்னர்தான் மின்சாரத்துக்குரிய நீர் பெறப்பட வேண்டும்.

வறட்சி, மின்வெட்டை காரணம்காட்டி விவசாயத்துக்குரிய நீரை வழங்காமல் இருக்கமுடியாது. விவசாயிகள் வீதிக்கு இறங்கினால் அது பெரும் பிரச்னையாக மாறும். இது சிலருக்கு விளங்குவதில்லை.

இந்த பிரச்னை தொடர்பில் நான் உண்மையை கதைப்பதால் பதவி விலக வேண்டியேற்படின், விவசாயிகளுக்காக அதனை செய்வதற்கு தயாராகவே இருக்கின்றேன்." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்தினால் இருக்கும் நல்லிணக்கமும் பறந்துவிடும்

## சுட்டிக்காட்டுகிறார் விமல் வீரவன்ஸ

**கொழும்பு, ஓக. 06**

**13 ஆவது திருத்தச்சட்டத்தை பொலிஸ் அதிகாரத்துடன் முழுமையாக அமுல் படுத்தினால், வட மாகாணத்தில் முற்றாக மதச் சுதந்திரம் இல்லாது போய்விடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

நீர்கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுதல் மட்டும், நாட்டிலுள்ள இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்திவிட முடியாது.

மாகாணசபைகளுக்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்படாத நிலையிலேயே, யாழ். திஸ்ஸ ரஜமகா விகாரையில் சமயக்கிரியைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.



இந்த நிலையில், பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் வடக்கில் ஒருபோதும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது போய்விடும்.

கொழும்பில் இந்துமத கிரியைகளை மேற்கொள்ள எந்தத் தடையும் கிடையாது. இங்கு தடையின்றி வேலை சுமந்துக் கொண்டு வீதி ஊர்வலம் செல்லலாம்.

யாரும் இதற்கு எதிர்ப்பினை வெளியிடமாட்டார்கள்.

எனினும், யாழில் தங்களுக்கு விரும்பிய மதங்களை வழிபட முடியாத நிலைமையே உள்ளது.

இப்படியான அடிப்படைவாத சிந்தனை கொண்ட அரசியல்வாதிகள் உள்ள மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக வழங்கினால், இப்போது இருக்கும் நல்லிணக்கமும் இல்லாது போய்விடும்- என்றார். (அ)

# நாணய நிதியத்திடம் செல்வதால் மட்டும் நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது!

## நிரோஷன் பெரேரா எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 06**

'சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதால் மட்டும், நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில், அனைத்து நாடுகளினதும் உதவி தேவைப்படுகிறது.சர்வதேச நாடுகளின் முதலீடுகள் தேவைப்படுகிறது. நாம் அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

நாம் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பிரதானிகளுடன் பேசும் போதெல்லாம், நம் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க முன்வருமாறுதான் அழைப்பு விடுக்கிறோம்.ஏனெனில், இந்த அரசாங்கம் சரியான பதில் ஒன்றைக் கூறாமலேயே தேர்தல்களை ஒத்திவைத்துள்ளது.

நிதியில்லாத காரணத்தினால் அன்றி, வாக்குகள் கிடைக்காத காரணத்தினால்தான் அரசாங்கம் தேர்தலை பிற்போட்டுள்ளது என்பது சிறு பிள்ளைக்குக்கூட தெரியும்.அடுத்தாண்டுகூட தேர்தலை நடத்தும் எண்ணம் இவர்களுக்கு கிடையாது.அரசாங்கத்திற்கு மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுக்காண வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதால் மட்டும், பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது-என்றார். (அ)

# கட்சி மாநாட்டை பிரமாண்டமாக நடத்தத் தயாராகின்றது ஐ.தே.க.

## 14 பேரடங்கிய குழு நியமனம்

**கொழும்பு, ஓக. 06**

ஐக்கிய தேசியக் கட்சியின் 77 ஆவது சம்மேளனம் செப்டம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இதற்கான நிகழ்வுகளை பிரமாண்டமாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் 14 பேரடங்கிய முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, உப தலைவர் அகில விராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, செயற்குழு உறுப்பினர்களான ஹரின் பெர்னான்டோ, மனுச நாணயக்கார, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் இக்குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டுவிழா மற்றும் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இக்குழு முன்னெடுக்கும். (அ)

# மலையக எம்.பிக்களை கூட்டாக சந்திக்கிறார் ஜனாதிபதி ரணில்!

**கொழும்பு, ஓக. 06**

மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் எம்.பிக்களும், அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ள அரவிந்தகுமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. வடிவேல் சுரேஷ் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

மலையக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் உரிமைசார் விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன என தெரியவருகின்றது.

மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இந்த நிதியை எந்தெந்த திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும், இது தொடர்பான கட்சிகளின் யோசனைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

அனைத்து மலையக பிரதிநிதிகளையும் ஒரே தடவையில் சந்திக்குமாறு ஜனாதிபதியிடம் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதை எதிர்கொள்ள அரசு தயார்!

## மொஹான் பிரியதர்ஷன டி சில்வா

**கொழும்பு, ஓக. 06**

எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளும் வகையில் கைவிடப்பட்டுள்ள 11 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக கைவிடப்பட்டுள்ள நெல் வயல்களில் மீண்டும் பயிரிடும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும், இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் எமது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு துறையாக விவசாயம் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் படிப்படியாக இப்பிரச்னைகள் தீர்க்கப்பட்டு வருவதாகவும் அதற்கு நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒரு நாடு என்ற வகையில், இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும். நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்துவதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

அதன்படி, நாட்டில் கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் சுமார் 11,000 ஏக்கர் வயல் நிலங்களில் பயிரிட எதிர்பார்த்துள்ளோம். கமநல அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருவதோடு, இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் அண்மையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரிசி வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வனவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, ஜனாதிபதியின் பணிப்புரையின்



பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகள் ஊடாக நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை எடுத்துள்ளோம். கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு பூராகவும் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் எமது நாட்டில் அரிசி மேலதிக கையிருப்பு இருந்ததாகவும் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகள் காரணமாக அந்நிலை வீழ்ச்சி அடைந்ததால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த வருடம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் மீண்டும் பழைய நிலைக்கு மீளலாம்.

எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. அந்த வகையில் தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையும்.

மேலும், சோளம், உழுந்து, பயறு உள்ளிட்ட மேலதிக பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க விவசாய அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உழுந்து, பயறு ஆகியவற்றைப் பயிரிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் எதிர்காலத்தில் உழுந்து பயறு ஆகிய பயிர்களில் பற்றாக்குறை ஏற்படாது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
06.08.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் பொது வேட்பாளர் தந்திரோபாயம்

ரணில் விக்கிரமசிங்க ஒரு தனிநபர். அவரை நம்பி தமிழர் தரப்பு பந்தயத்தில் ஈடுபடுவது மிகவும் ஆபத்தானது. தமிழர் தரப்பின் அணுகுமுறைக்கும், ரணிலின் அணுகுமுறைக்கும் அடிப்படையிலேயே முரண்பாடு உண்டு. ஏனெனில், ரணில், விடயங்களை பொதுநிலையிலேயே அணுக முற்படுகின்றார். நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கும் அவரோ, விடயங்களில் அனைவரும் உடன்பட்டால் தனக்கு ஆட்சேபனையில்லை என்றவாறே பிரச்னையை கையாள முற்படுகின்றார். இது சிக்கலானது. ஏனெனில் தமிழர் தரப்புக்களோ ரணிலை நம்பியே - பேச்சுவார்த்தைக்கு செல்கின்றனர் - ஆனால், அவரோ, அனைத்து கட்சிகளினதும் ஆதரவை கோருகின்றார்.

இந்த நிலையில், ரணிலை மட்டும் கருத்தில் கொண்டு தமிழர் தரப்பு சிந்திக்க முடியாதென்பது தெளிவாகின்றது. எனவே, தமிழர் தரப்பிடம் தென்னிலங்கையை கையாளும் பொறிமுறை இருப்பது அவசியம். வெறுமனே பாராளுமன்றத்தில் எதிர்ப்பதன் ஊடாக அல்லது தூதரகங்களில் முறையிடுவதன் ஊடாக, இந்த விடயத்தை கையாள முடியாது. தமிழர் தரப்பை தென்னிலங்கை திரும்பிப் பார்க்கவேண்டும்.

இப்போதுள்ள நிலையில், தமிழ் தேசியக் கட்சிகளின் ஆதரவின்றியே, தமிழ் மக்களின் ஆதரவை தங்களால் பெறமுடியுமென்று, ரணில் கருதக்கூடியளவிற்கே சூழல் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து காய்களை நகர்த்திக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்கள் நிச்சயம் தனக்கே வாக்களிப்பார்களென்று கருதக்கூடிய சூழலே மேலோங்கியிருக்கின்றது. இந்த நிலையில், தென்னிலங்கையை தமிழ் தேசிய கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? தமிழர்களுக்கு முன்னாலுள்ள தந்திரோபாயம் என்ன?

ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாஸ ஒருவேளை இன்னொருவர் எவராக இருந்தாலும், அவர்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவு கட்டாயமானது. இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை பேரம் பேசும் ஆயுதமாக கைக்கொள்ளவேண்டுமாயின், ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் தேசியக் கட்சிகள் சிந்திக்க முடியும். இதன் மூலம், தென்னிலங்கையுடனான பேரம் பேசலை மேற்கொள்ளலாம். பொருளாதார நெருக்கடியின் பின்னரான சூழலில், தென்னிலங்கையின் அரசியல் சமூகம் ஒப்பீட்டடிப்படையில் அதிகம் சிதறியிருக்கின்றது. இந்த நிலையில் புதிய கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே, ஜனாதிபதித் தேர்தலை ஒருவர் எதிர்கொள்ள முடியும். அதற்கான காய்நகர்த்தல்கள் தெளிவாகவே தெரிகின்றது.

இந்த நிலையில் ஒரு பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அனைவரும் வாக்களிப்பதன் ஊடாக, தென்னிலங்கையை இறங்கிவரச் செய்ய முடியும். இப்போது அவர்களுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் தேவை. தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பைக் கொண்டே, பேரம் பேசலை முன்னெடுக்கலாம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெளித்தரப்புக்கள் எவ்வாறான பார்வையை கொண்டிருக்கின்றன என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாவிட்டாலும்கூட, நிச்சயம் அவர்களது ஆர்வம் ஒரு கட்டத்தில் வெளிப்படும். அவ்வாறான சூழலில், அவர்களும் தமிழர் தரப்பை அணுகுவார்கள். எனவே தற்போதுள்ள சூழலில், தமிழ் தேசியத் தரப்புக்கள் கையாளக்கூடிய அதிசிறந்த தந்திரோபாயம் இதுவொன்றாகவே இருக்க முடியும்.

ஆனால் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்றாக நிற்கவேண்டும். அப்படியானதொரு சூழலில் மட்டுமே இது வெற்றியளிக்கும். தற்போதைய நிலையில், தமிழ் பொதுவேட்பாளருக்கு இரா.சம்பந்தன் மிகவும் பொருத்தமானவர். ஆனால் இந்த விடயத்தை கடந்த காலத்தில் மேற்கொண்டது போல், மற்றவர்கள் ஏளனமாக நோக்கும் நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. அது ஒரு பலமான தமிழர் ராஜதந்திரமாக வெளிப்படவேண்டும். சிவில் சமூகங்கள் என்னும் பெயரில், விடயத்தை குழப்புவதற்கு அனுமதிக்கக்கூடாது.

# நீர்க்கட்டண அதிகரிப்பை எதிர்த்து மக்கள் அணி திரளத் தொடங்குவர்

## கூறுகின்றார் அனுரகுமார



*கொழும்பு, ஒக. 06*

நீர்க் கட்டண அதிகரிப்புக்கு எதிராக உடனடியாக மக்கள் அணிதிரளத் தொடங்குவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றிலெயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார அழுத்தம் , மருந்து பொருட்கள் தொடர்பான பிரச்னை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றினால் மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களை நெருக்கடி நிலைமைக்கு தள்ளுகிறது.

மக்கள் மீதான இந்த அனைத்து அழுத்தங்களுக்கும் எதிராக வாழும் உரிமையை கோரி மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராக உள்ளோம்-என்றார். (அ)

# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு 450 மில்லியன் ரூபாய் நிதி உதவி

*கொழும்பு, ஒக. 06*

நாட்டில் டிஜிட்டல் மயமாக்கலின் அடித்தளமான இலங்கை தனித்துவ டிஜிற்றல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த இந்திய - இலங்கை திட்டக் கண்காணிப்பு குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கேள்விப் பத்திரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், உரிய கால வரையறையின் படி அவை பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் இதன்போது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முற்பணமாக இத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட தொகையில் 450 மில்லியன் இந்திய ரூபா பெறுமதியான காசோலையை, இந்திய தூதுவர் இதன்போது தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்திடம் கையளித்துள்ளார்.

உரிய கால வரையறைக்கமைய இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும், வாரத்திற்கு ஒருமுறை கூடி அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யுமாறும் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்திய-இலங்கை ஒத்துழைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் இத்திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையில் மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இதற்காக இந்திய அரசாங்கம் வழங்கும் ஆதரவுக்கு நன்றியும் தெரிவித்தார்.

(அ)

# மன்னாரில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் மக்களிடம் உதவி கோரும் பொலிஸார்


*மன்னார், ஒக. 06*

மன்னார் பிரதான பாலத்தடி யில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு சற்று தொலைவில் உள்ள கடற்கரைப் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண மன்னார் பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் சுமார் 30 தொடக்கம் 50 வயது மதிக்கத்தக்க 4.8 அடி உயரம் கொண்டவர் எனவும், அந்நபர் கருப்பு நிற நீளக் கை சேட், கருப்பு நிற அரைக் காற்சட்டை மட்டும் நீல நிற பெட்டி சாரம் அணிந்து காணப்பட்டிருந்தார் எனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் அல்லது அடையாளம் காண விரும்புபவர்கள் மன்னார் பொலிஸ் நிலையம் அல்லது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையுடன் தொடர்பை ஏற்படுத்துமாறு மன்னார் பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -89

# மனித குலத்தின் பேராசையால்...

**கணபதி சர்வானந்தா**

“சீசனில்லாது, பழங்களை மனிதன் எல்லாப் பருவத்திலும் உண்ண பேராசை பூண்டபோது வேளாண்மையில் இருந்து இயற்கை நீங்கியது. – ஜப்பானிய வேளாண்மை அறிஞர் மசானா புக்கோகோ.

பருவத்தே பயிர் செய் என்று சொல்லிச் சென்ற எம் முன்னோரின் வாக்குக்குப் பின்னால் எத்தனை பொருள் உண்டு எனத் தற்போதுதான் உலகம் அறியத் தலைப்பட்டிருக்கிறது. மனித உடல் ஆரோக்கியத்தை முதன்மைப்படுத்தியே அவ்வாறு அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அது மட்டுமல்லாது பயிர்களின் ஆரோக்கியமும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இயற்கை, மனிதன், பயிர்கள் என்ற முக்கோண ஆரோக்கியத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே அந்த வாக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

மரபணு மாற்றம். புதிய ‘ஹபிரைட்’ பயிரினங்கள். அவை எல்லாக் காலங்களிலும் பூத்துக் காயத்துக் கனிகளைத் தரவல்லனவாகக் காணப்பட்டாலும், அவை ஆரோக்கியமாக இருக்கின்றனவா? ஆரோக்கியத்தைத் தருகின்றனவா? இயற்கையால் வழிநடத்தப்படுகின்றனவா? இயகையோடு இயைந்ததாக இருக்கின்றனவா? என்ற பல கேள்விகளுக்கு விடை காண முடியாது தவிப்பது மனிதகுலமே.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மனித குல எண்ணிக்கை அதிகரிப்புக்கேற்ப விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் அதற்கு என்ன செய்யலாம் என்று விஞ்ஞான உலகம் சிந்திக்கத் தலைப்பட்டதன் விளைவு எல்லாக் காலநிலைகளிலிக்கும் தன்னை உட்படுத்தி அதிக விளைச் சலையும் அதிக லாபத்தையும் தரவல்ல பல பயிர்கள் உருவாக்கப்பட்டன. அவை குறுகிய காலத்தில் பயன்தரவல்லனவாகப் பார்த்துக் கொண்டனர். அப்படி உருவாக்கப்பட்ட அனைத்தும் பௌதிக பரிணாமத்தை கொண்டிருந்தனவே ஒழிய அவற்றுள் மனிதனை ஆரோக்கியமாக வைத்திருக்க வல்ல “இயற்கைச் சக்தி” என்ற தத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை என அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் நிரூபிக்கின்றன. அதன் விளைவே மனித குலம் மீண்டும் இயற்கையை நோக்கித் திரும்பத் தலைப்பட்டிருக்கிறது. இயற்கை வழி விவசாயத்தினை ஊக்குவிக்க விரும்பி அது தொடர்பானப் பல விடயங்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கின்றதன் பின்னணியும் அதுவே. இராசாயனமற்ற உலகம், தன்னிறைவு, பிறருக்கும் உதவுதல் என்ற நல் எண்ணங்களின் அடிப்படையிலேயே வீட்டுத் தோட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தலைப் பட்டிருக்கின்றனர்.அது மட்டுமல்லாது வீட்டுத் தோட்டங்களோடு சிறு பண்ணைகளையும் அமைக்க ஊக்கிவிக்கவும் விரும்புகின்றனர். இயற்கை விவசாயத்தோடு பண்ணைகளும் பின்னிப் பிணைந்தவைகளாகக் காணப்படுவதால் இருவழிச் செயற்பாடாக அது அமையும் என அவர்கள் நம்புகின்றனர்.

இவ்வாறான வீட்டுத் தோட்டங்கள் பற்றிய சிறப்பைச் சொல்லப் பாடசாலைகளே சிறந்த இடமாகவும் ஆரம்பப் புள்ளிகளாவும் அமையும் என எண்ணுவதால் பாடசாலை மாணவர்கள் ஒவ்வொரும் தத்தம் வசதிக்கேற்ப வீட்டுத் தோட்டங்களை அமைப்பதற்குரிய ஆலோசனைகளை வழங்குவது பற்றியும் ஒருசாரார் சிந்தித்து வருகின்றனர்.

உணவே நஞ்சாக அமையும் அபாயம். “இலங்கைக் காய்கறிகளிலேயே ஆகக் கூடுதலான நச்சுத்தன்மை.” எனத் தலைப்பிட்டு வந்த பத்திரிகைச் செய்தியொன்றைப் பார்க்க நேரிட்டது. கொழும்பு – யூலை 30. உலகில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளில் ஆகக் கூடுதலான நச்சுத்தன்மை கொண்ட காய்கறிகள் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன என விசவாய நீர்ப்பாசன கிராமியப் பொருளாதாரம், கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார். அதனால் தொற்றா நோய்களினால் பெரும் எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். – என அச் செய்தி எழுதப்பட்டிருக்கிறது.

காய்கறிவகைகளுக்காக வருடம் ஒன்றில் மூன்று இலட்சம் மெற்றிக் தொன் இராசன உரவகைகள் பயன்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்லாது கிருமிநாசினிவகைகளும் ஐயாயிரம் மெற்றிக் தொன்வரை பயன்படுத்தப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டு செய்திகளும் ஆரோக்கிய சமூகத்துக்கு மிகவும் ஆபத்தானவை. இன்னும் வைத்தியசாலைகள் பெருக்கப்பட வேண்டிய தேவையைச் சுட்டி நிற்கின்றன.உரம், கிருமிநாசினி போன்றவற்றின் இறக்குமதித் தொகை அதிகரிக்க அதிகரிக்க வைத்தியசாலைகளின் அதிகரிப்பும் தவிர்க்க முடியாதொன்றாக இருக்கும் என இயற்கை வைத்தியர் ஒருவர் சுட்டிக் காட்டுகிறார்.

இருவருடங்களுக்கு முன்னர் அரசு இராசாயன உரங்களின் இறக்குமதியைத் தடைசெய்யபோது அதற்கு எதிராகப் பொங்கி எழுந்தவர்கள் மக்கள். அந்த நடவடிக்கை மக்களின் ஆரோக்கிய நலனை முன்னிறுத்தி எடுக்கப்பட்ட முடிவு அல்ல. அப்போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க அவர்கள் மேற்கொண்ட திட்டங்களில் அதுவும் ஒன்று. இருந்தும் காலப்போக்கில் மக்கள் போராட்டம் வலுத்த போதும், உணவுப் பற்றாக் குறை ஏற்படும் அபாயத்தை உணர்ந்த போதும் அத் தடை நீக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

இருந்தும் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். அவர்கள் அதற்காக இயைந்து போகவும் தயாராக இருக்கின்றனர் என்பதை உணவுக்காப் பயன்படுத்தும் எண்ணைத் தயாரிப்பில் அவர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தைச் சுட்டிக்காட்டலாம். தற்போது குடாநாட்டில் பல முற்றங்களில் தேங்காய் எண்ணெய் ஊற்றுவதற்காக கொப்பறாக்கள் காயவிடப்பட்டிருப்பதை உதாரணமாகக் கொள்ளலாம். அந்த எண்ணெயில் தயாரிக்கபட்ட உணவுவகைகளே அதிகம் பரிமாறப்படுகிறது. இது ஒரு சிறு செயற்பாடாகவும் சிறிய மாற்றமாகவும் தென்படலாம். எதிர்காலத்தில் இதன் வீச்சு அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் தென்படுகின்றன. கிராமங்கள் தோறும் காணப்படும் ஆலைகளில் கூலிக்கு எண்ணெய் ஊற்றும் இயந்திரங்கள் பொருத்துவது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆரோக்கியத்தை நோக்கிய ஆரம்ப நகர்வு இது எனவும் குறிப்பிடலாம். எனவே நல்ல பயன் அறிந்து மாற்றத்தை நோக்கிப் பயணிப்போம். •

# இந்தவார ராசிபலன் 06.08.2023 - 11.08.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 21
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 9.00 - 10.30 திதி : சதுர்த்தி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவர். புதியவர்களிடம் கவனமாக நடந்துகொள்வது அவசியம். சொந்தத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களும், பணியாளர்களும் ஒத்துழைப்பு தருவார்கள். பணத்தை வெளியில் கொண்டு செல்லும் போது கவனம் தேவை. குடும்பத்தில் பண நடமாட்டமும், மகிழ்ச்சியும் இருக்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

புதிய பொருள் வாங்குவதையும், பயணங்களையும் தவிர்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் கடமையில் சுறுசுறுப்பாக இருந்து உயர் அதிகாரிகளின் பாராட்டு பெறுவார்கள். யாரிடமும் கடுமையாக நடந்து கொள்ளாதீர்கள். சொந்தத் தொழிலில் நல்ல லாபத்தை எதிர் பார்க்கலாம். வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு இருக்கும். பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். கூட்டுத்தொழில் லாபகரமாக இயங்கும். பணப் பொறுப்பில் உள்ளவர்கள் கவனமாக இருக்க வேண்டும். குடும்பத்தில் கடன் தொல்லை அகலும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மறைமுக எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியதிருக்கும். உத்தியோகஸ்தர்கள், மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சொந்தத் தொழிலில் உள்ளவர்கள், திருப்புமுனையான வாழ்க்கை அமைய கடுமையாக உழைப்பீர்கள். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவர். கூட்டுத்தொழிலில் உள்ள மறைமுக எதிரிகளை சமாளிக்க போராடுவீர்கள். தொழில் ரீதியான புதிய ஒப்பந்தங்களை போடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் கவனம் அவசியம்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் சக அதிகாரிகளையும், சகப் பணியாளர்களையும் அனுசரித்துச் செல்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும். உங்களின் திறமைக்காக புதிய பொறுப்புகள் வந்துசேரும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களையும், ஊழியர்களையும் சுமுகமாக கையாளுங்கள். வியாபாரம் செய்யும் பொருட்களின் தரம் மற்றும் நியாயமான விலை, உங்களுக்கு நல்ல லாபத்தைப் பெற்றுத்தரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கனிவான பேச்சு, கருத்துமிக்க செயல்களால் காரியங்களில் வெற்றிபெறும் வாரம் இது. எதிர்பாராத திடீர் பண வரவு ஏற்பட்டாலும், செலவுகள் அதற்குத் தகுந்தபடி ஏற்படும். உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. வேலைகளில் பொறுப்புடனும், கவனமாகவும் நடந்துகொள்வது நன்மைதரும். சொந்தத் தொழில் செய்பவர்கள், கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருங்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் கண்டாலும், கவனமுடன் செயலாற்றுவது நல்லது. மற்றவர்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள், தங்கள் செயலில் நிதானத்தை கடைபிடிக்க வேண்டிய நேரம் இது. அலுவலகப் பதிவேடுகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்வது முக்கியம். பணியாளர்கள், நல்ல முறையில் ஒத்துழைப்பார்கள். பண விஷயங்களில் கவனமாக இருங்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். யாருக்கும், எதற்காகவும் வாக்கு கொடுக்க வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் பொறுப்புகளில் கவனமாக நடந்துகொள்ளுங்கள். புதிய நபர்களிடம் அலுவலக விஷயங்களைப் பற்றி பேசாதீர்கள். சொந்தத் தொழிலில் உள்ளவர்கள், பணியாளர்களின் பணிகளை அவ்வப்போது கண்காணிப் பது நல்லது. பணம் புழங்கும் இடங்களில் நம்பிக்கைக்கு உரியவர்களை அமர்த்துங்கள். தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம்இருந்தால் அதனைத் தள்ளிப் போடுங்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சிகளில் தீவிரமாக செயல்புரிந்து வெற்றி அடைவீர்கள். காரியங்களில் சிறு சிறு தடைகள் இருந்தாலும், அவற்றை உடைத்து முன்னேறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த காரியங்களில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் முடிவில் வெற்றியை சந்திப்பீர்கள். உயர் அதிகாரிகளிடம் கவனமாக நடந்துகொள்வது நல்லது. சொந்தத் தொழிலில் ஏற்ற இறக்கங்களை சந்தித்தாலும், வழக்கமான லாபம் குறையாது.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

புதிய முயற்சிகளில் பொறுமை, நிதானம் தேவைப்படும். கனிவான பேச்சுக்களால் காரியங்களை சாதிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள், தங்களுக்கான பொறுப்புகளில் கவனமாக இருக்க வேண்டும். உயரதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும், எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைப்பது தள்ளிப்போகலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், பணியாளர்களின் வேலையை கண்காணிப்பது அவசியம்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

காரியங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் விலகி, முன்னேற்றமான நிலை உண்டாகும். நீண்ட காலமாக இழுபறியில் இருந்த காரியங்களில் தெளிவான முடிவு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் கடமைகளைக் கவனமுடன் செய்தாலும், உயரதிகாரிகளுக்கு திருப்தி ஏற்படாது. சகப் பணியாளர்கள் செயல்பாடு மனச்சஞ்சலத்தை உருவாக்கும். மூலதனத்தை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டு செயல்பட்டு, முன்னேற்றத்தைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் கடமைகளில் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது. எதிர்பார்ப்புகளை சிறிது காலத்திற்குத் தள்ளிப் போடுவது நல்லது. சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளரிடம் சுமுகமாக நடந்துகொள்ளாவிட்டால், வருமானத்தில் பெரிய இழப்பை சந்திக்க நேரிடும். கூட்டுத்தொழில் நன்றாக நடைபெறும். பணியாளர்களின் செயல்களை அவ்வப்போது கண்காணிப்பது நல்லது.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

சுணக்கமாக நடந்த வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற முயற்சி மேற்கொள்வீர்கள். தொழில் ரீதியான தன வரவுகள் இருக்கும். உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பார்த்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். பிரிந்திருந்த மனைவி- பிள்ளைகளுடன் இணைந்து வாழும் சூழல் உருவாகும். பணப் பொறுப்பில் இருப்பவர்கள் கவனமாக இருங்கள். சொந்தத் தொழிலில், வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த முயற்சிப்பீர்கள். புதிய கிளை தொடங்கும் எண்ணத்தை தள்ளிப்போடுங்கள். கூட்டுத் தொழில் வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். கூட்டாளிகள் ஒத்துழைப்போடு அதிக மூலதனம் போடுவீர்கள்.


# மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகும் ராகுல் காந்தி: களத்துக்கு தயாராகும்போது பா. ஜ. க. முகத்தில் கரி?

நரேந்திர மோடி மற்றும் அவரது பாஜகவின் தீவிர ரசிகனும்கூட கடந்த சில மாதங்களாக, பிரதமர் மற்றும் அவரது காவிக் கட்சிக்கு இருக்கும் மக்களாதரவு குறைந்து வருவதைக் கண்டு கவலை கொள்ளாமல் இருக்கமுடி யாது. மே மாதம் கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பாஜக தோல்வியடைந்ததையடுத்து, இந்த இறங்கு முகம் சற்று அதிகமாகவே தெரியத் தொடங்கியது. தென்னிந்தியாவில் பாஜக வலுவாக இருந்த ஒரே மாநிலமான கர்நாடகத்திலேயே இந்தப் பின்னடைவு ஏற்பட்டிருப்பது, அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வென்று மூன்றாவது முறையாக பிரதமராகப் பொறுப்பேற்கும் மோடியின் ஆர்வத்திற்கு ஒரு தீவிர சவாலாக இருக்கும் என்று அரசியல் வல்லுநர்கள் முடிவுக்கு வந்தனர். நானும் இதை 'ஈழநாடு' கட்டுரை களில் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். ஆனால், பிரதமர் மோடி மற்றும் அவரது சர்வ வல்லமை படைத்த உள் துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில், பாஜக மீண் டும் தேர்தலில் வெற்றிபெறும் என்று ஊகிக்கப்பட்டது. 2019 பொதுத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத வகையில், 37.36 வீதம் வாக்குகளைப் பெற்ற பாஜக 303 இடங்களை வென்று, பெருவெற்றி பெற்றது. 1989க்குப் பிறகு இந்த அளவுக்கு வாக்கு சதவிகிதம் வேறேந்தக் கட்சியும் பெறவில்லை. இதுபோல அமோக வெற்றி இல்லாவிட்டாலும், மோடி மீண்டும் பிரதமராக வருவதற்கு வாய்ப்புண்டு என்று கணிக்கப்பட்டது. அதன் பிறகு, இரண்டு பெரிய அதிர்வுகளை பாஜக எதிர் கொண்டது. முதலில், எதிர்க்கட்சித் தலைவர்களும் கட்சிகளும் மூன்றாவது முறையும் மோடி வந்துவிடப் போகிறாரே என்று அஞ்சி ஒன்று கூடினர். நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத் நீதிமன்றம் ஒன்று, மோடி என்ற சமூகம் குறித்து காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவதூறு கூறியதான வழக்கொன்றில் அவருக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதித்ததையடுத்து இந்த எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை வேகம் பெற்றது. இந்தத் தீர்ப்பால் ராகுல் தனது நாடாளுமன்ற உறுப்பினர் தகுதியையும் இழந்தார் காரணம், இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் அவை உறுப்பினர் தகுதியை இழக்கிறார்கள் என்பது சட்டம். பாஜக உறுப்பினர் ஒருவர்

தொடுத்த இந்த அவதூறு வழக்கு மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று எதிர்க்கட்சிகள் கூறின. மக்கள் பலரும் இதை நம்பினர், சில மோடி ஆதரவாளர்களும் கூட. மோடி மற்றும் பாஜகவின் பிம்பத்தின்மீது வீழ்ந்த அடுத்த கல், வெள்ளியன்று (ஒகஸ்ட் 4) உச்ச நீதி மன்றம் ராகுலின் தண்டனைக்கு விதித்த இடைக்காலத் தடை. இந்தத் தீர்ப்பில், குஜராத் நீதிமன்றம் ஏன் ஓர் அவதூறு வழக்கில் சரியாக இரண்டாண்டு சிறைத் தண்டனை விதித்தது? ஒரு நாள் குறைவான தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்கூட, தகுதி நீக்கத்திலிருந்து அவர் தப்பியிருப்பார் என்பதால்தான் இப்படிச் செய்யப்பட்டதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. இப்போது, ராகுல் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வலம் வருவார். இதனால் பாஜக தலைமையின் முகத்தில் பூசப்பட்ட கரி இன்னும் அழுத்தமாகத் தெரியும். மே 2024 தேர்தல் களத்துக்குத் தயாராகும் நேரத்தில் இது கட்சிக்கு அழகல்ல.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் அரங்கேறி வரும் கொடும் வன்முறை குறித்த கனத்த மௌனம் மோடியின் பிம்பத்துக்கு ஏற்படுத்தியிருக்கும் சேதம் குறித்து ஏற்கெனவே நான் ஈழநாடு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன், அதை இங்கு மீண்டும் எழுதத் தேவையில்லை. எனவே, இப்போது, உச்ச நீதி மன்ற உத்தரவுப்படி, ராகுல் மீண்டும் உறுப்பினர் தகுதி பெற்றதையடுத்து, I.N.D.I.A (Indian National Developmental Inclusive Alliance) என்ற பொருத்தமான பெயரில் அமைந்த தங்கள் புதிய கூட்டணியுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர். எனினும், மோடி மூன்றாவது முறையாகப் பிரதமராவார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது, வெற்றியின் அளவு வேண்டுமானால் குறையலாம். காரணம், நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள மாபெரும் உட்கட்டமைப்பு வளர்ச்சி, உலக அளவில் இந்தியாவின் நிலை மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி குறித்து இளைய சமுதாயத்தினரிடம் எழுந்துள்ள அதிக எதிர்பார்ப்புகள். பொறுத்திருந்து பார்ப்போம்.

ரொறன்ரோவிலிருந்து அண்ணன் கரிகாலன் நவரத்தினம் போன் செய்தார். அவர் சம உரிமைகளுக்காகப் போராடிய மூத்த தமிழ்த் தலைவர்களில் மிகச் சிறந்தவர் தன் வாழ்க்கையை, சுவை உணர்வுகளைத் தன் தமிழ் மக்களின் நலனுக்காக உழைப்பதில் தியாகம் செய்தவர். எப்போதும் போலத்தான் - என்னைப் போலத்தான் அவரின் சோர்வடைந்த பேச்சு. "என்ன பஹவான் இது, இப்படியே போய்க்கொண்டிருந்தா எப்போதான் இந்தத் தமிழன் திருந்துவான், இந்த இனத்துக்கு எப்போதான் விடிவுகாலம் பிறக்கும்?" கரிகாலன் தொடர்ந்து 15 நிமிடங்கள் தனது மனக் குமுறலை விளக்கிக் கொந்தளித்துப் பேசினார். முதலில், அண்மையில் டில்லியில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திப்பின்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை விமர்சித்து 'இந்து' நாளிழில் வெளியான தலையங்கத்தின் நகலைத் தனக்கு அனுப்புமாறு என்னிடம் கோரினார் அவர். அந்தத் தலையங்கத்தில், "13ஆவது சட்ட திருத்தத்தை அமுல்படுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதாகவும் இந்திய மீனவர்கள் கைது குறித்து நீண்ட நாட்களாக நிலுவையில் இருக்கும் பிரச்னைகளைத் தீர்ப்பது பற்றியும் இலங்கை முன்பே ஒப்புக்கொண்டிருந்தது" குறித்து அந்தக் கூட்டறிக்கை மௌனம் சாதிக்கிறது என்று சரியாகக் குறிபிடப்பட்டுள்ளதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். 'இந்து' பத்திரிகையின் ஆண்டுச் சந்தாதாரன் நான். அதன் செய்திகளையும் தலையங்கத்தின் தரத்தையும் படித்துப் பாராட்டி வளர்ந்த நான், உடனடியாக தலையங்கத்தின் 'லிங்'கை கரிகாலனுக்கு அனுப்பி வைத்தேன். ஞாயிறு



சென்னை மடல்
-பகவான் சிங்-

சமுதாயத்திற்கான ஓர் ஆபத்து குறித்து இந்த 'ஈழநாடு' கட்டுரைகளில் நான் எழுதியுள்ளேன் - சொல்லப் போனால், வாசகர்களை எச்சரித்துள்ளேன். இந்துமா கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் இந்திய - சீன மோதலில், இடையில் சிக்கிக்கொள்ளும் அபாயம்தான் அது.

மோடியுடனான சந்திப்பின்போது ரணில் என்ன பேசலாம், என்ன பேசக்கூடாது என்று பொதுஜன பெரமுன கூறலாம் என்றால், அவர்களுக்கு உத்தரவுகள் எங்கிருந்து வருகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். தமிழ்த் தலைவர்கள் இந்தப் புவிசார் அரசியல் மோதலை ஓரமாக நின்று வேடிக்கை பார்ப்பதுடன் மட்டும் இல்லாமல், அறிந்தோ அறியாமலோ அதற்குத் துணைபோகவும் செய்கிறார்கள். தமிழ் மக்களின், தமிழ்

## புவிசார் அரசியல் மோதலை வேடிக்கை பார்க்கும் தமிழ் தலைவர்கள்!

உரையாடலில் மற்றவற்றைப் பேசுவதற்கு முன், தலையங்கத்தில் இடம்பெற்றுள்ள ஓரிரு விஷயங்கள் குறித்து பகிர விரும்புகிறேன். முதலாவதாக, 13ஆவது சட்ட திருத்தத்தை அமுல் படுத்தி, தமிழர் உரிமைகளுக்காக முன்பு அளிக்கப்பட்ட உறுதிமொழி குறித்து அந்தக் கூட்டறிக்கை எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், அப்போது பேசிய பிரதமர் மோடி, அதிகாரப் பகிர்வு பற்றியும், உள்ளாட்சித் தேர்தல் நடத்தி இலங்கைத் தமிழர்களுக்கு மரியாதையும் கண்ணியமும்மிக்க வாழ்வை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியம்

## சிவில் சமூகம் எப்போது விழிக்கும்?

பற்றியும் வலியுறுத்தியதை 'இந்து' தலையங்கம் குறிப்பிட்டிருந்தது. இரண்டாவது விஷயம், இந்தியா-இலங்கை இடையே பதற்றத்திற்குக் காரணமாக இருக்கும் இந்த நீண்ட காலப் பிரச்னைகள் குறித்து விவாதிக்கும் பெரும்பான்மை, ரணில் அரசுக்கு இல்லை என்று, அதிபர் விக்கிரமசிங்கவிற்கு பாராளுமன்றத்தில் ஆதரவளிக்கும் ஆளும் பொதுஜன பெரமுன கட்சி தெளிவாகக் கூறியுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தலையங்கம் குறித்துச் சில வாசகர்கள், அண்டை நாடுகள் பிரச்னை என்று வந்தால் இந்தியாவிடம் உதவி கோரியுள்ளன (பொருளாதார நெருக்கடியின் போது இலங்கை செய்தது போல்). ஆனால், சிக்கல் தீர்ந்தவுடன் இந்தியாவை உதறித் தள்ளியுள்ளன என்று தங்கள் மன வருத்தத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஏனென்றால், தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது போல், பொதுஜன பெரமுன ரணிலை எச்சரிப்பதும் அவர், தனக்குப் பெரும்பான்மை இல்லாத நாடாளுமன்றத்தில், தனது அரசியல் குற்ற உணர்வுகளால் ஒளிந்துகொள்வதும் ஒரு கசப்பான உண்மையை உணர்த்துகின்றன. "இலங்கை பிற விஷயங்களிலும் இந்தியாவைச் சார்ந்திருக்கும் போதிலும், இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் தமிழர்கள் விஷயத்தைக் கொண்டுவருவதை கொழும்பு விரும்பவில்லை". "தொடர்புகளை வளர்த்தல், வளத்தை ஊக்குவித்தல், இந்திய - இலங்கை பொருளாதாரக் கூட்டாளித்துவக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் அந்தக் கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதில் இருந்த ஐந்து முக்கிய அம்சங்களை 'இந்து' தலையங்கம் பட்டியலிட்டிருந்தது. கடல் சார் விஷயங்கள், வான் பரப்பு, ஆற்றல், வர்த்தகம், மக்களுக்கிடையிலான முன்னெடுப்புகள் ஆகியவைதான் அவை. வளர்ச்சி இலக்குகளை எவ்வளவு உச்சத்தில் பறக்கவிட்டாலும், தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வைப் பற்றிய திட்டங்கள் இல்லாமல் வருங்காலத்துக்கான இந்த வரைவு முழுமையடையாது என்று 'இந்து' தலையங்கம் சிறப்பாகக் கூறியுள்ளது.

இந்திய - இலங்கை உறவுகளில் உள்ள பாசாங்குகள் மற்றும் புவிசார் அரசியலில் இந்தியா தன்னைத் தானே ஆதிக்கம் நிறைந்ததாகக் கருதும் போக்கு ஆகியவற்றைத் தோலுரித்துக் காட்டிய இந்தத் தலையங்கத்திற்காக எனது 'இந்து' பத்திரிகையாள நண்பர்களுக்கு நான் நன்றி தெரிவித்தே ஆகவேண்டும். இலங்கைக்கான, குறிப்பாக, பல இன்னல்களைத் தாங்கிவந்த தமிழ்ச் மண்ணின் நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றின்மீது ஏற்படக்கூடிய நீண்டகாலத் தாக்கத்தைப் பற்றிய கவலையின்றிச் சில முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள், சீனாவின் கைப்பாவையாகச் செயல்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

மீண்டும் அண்ணன் கரிகாலனது தொலைபேசி அழைப்பும் எங்கள் உரையாடலில் இருந்த மன வேதனையும் பற்றி. தமிழ்த் தலைவர்களுக்கிடையில் இருக்கும் ஒற்றுமையின்மை குறித்து அவர் நீண்ட நேரம் பேசினார். தொடர்ந்து, சிங்களத் தலைவர்கள், தமிழர்களின் அடிப்படை சமூக - அரசியல் உரிமைகளை மறுக்கத்தான் இது உதவுகிறது என்றும் அவர் வேதனைப்பட்டார். உதாரணமாக, ரணிலின் டில்லிப் பயணத்திற்கு முன்னர், அவரிடம் பாரதப் பிரதமர் என்ன கூற வேண்டும் என்பதுபற்றி வலியுறுத்தி ஐந்தாறு வெவ்வேறு தமிழ்க் கட்சிகளும் தலைவர்களும் மோடிக்குத் தனித்தனியாக கடிதங்கள் அனுப்பியிருந்தனர். இந்த அத்தனை கடிதங்களையும் படிக்க, பாரதப் பிரதமருக்கு நேரம் இருக்குமா? அல்லது ஒரே விஷயம் குறித்து, அதே தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அனைவரும் ஒற்றுமையாக ஒரே குரல் எழுப்பாமல், தனித்தனியாகக் கடிதம் எழுதினால், தமிழர் அரசியல் குறித்த ஒற்றுமையின்மை என்ன மரியாதையை அவரிடம் பெற முடியும்? அவர்கள் அனைவரும் ஒரு கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டு, ஒரே கடிதமாக அனுப்பியிருக்கலாமே. அது ஒரு வலிமையான பரிந்துரையாக அமைந்திருக்குமே" என்று மனம் நொந்தார் கரிகாலன். " கறுப்பு ஜூலை பேரணிகளின் போது என்ன நடந்தது? தங்கள் அரசியல் வேறுபாடுகளை விடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கும் நீதி வேண்டிப் போராட, ஒரே தமிழ்க் குரலாக ஒலிக்க, ஒரே மாபெரும் பேரணிக்காக ஒன்று கூடினரா? "எனது நண்பர் சிவாஜிலிங்கம் கூட ஒரே ஒரு நண்பருடன், கையில் ஒரு பதாகையுடன், தன் தனிப் பேரணியை நடத்தியுள்ளார், அதன் படமும் அனுப்பியுள்ளார். கறுப்பு ஜூலைக்காகக் குறைந்தது 25 பேரையாவது அவரால் ஒன்று சேர்த்திருக்க முடியாதா? அவ்வளவு பேரை ஒன்றுகூட்ட அவரால் இயலாத நிலையில், இன்னும் அதிகமான மக்களும் பதாகைகளும் கொண்ட வேறு ஒரு பேரணியில் கலந்து கொண்டிருக்கலாமே" என்று அண்ணன் வேதனைப்பட்டார் சிவாஜிலிங்கமாகட்டும், விக்கினேஸ்வரனாகட்டும், சுமந்திரனாகட்டும், செல்வம் அடைக்கலநாதனாகட்டும் அல்லது டக்ளஸ் தேவானந்தாவாகட்டும், அது சிந்தித்துக்கூடப் பார்க்கமுடியாத ஒன்று. அவர்கள் அனைவருக்கும் தமிழர்களின் ஒட்டுமொத்த நலனை விட, தங்கள் முன்னிறுத்தல், முன்னுரிமைகள் மட்டுமே முக்கியம். தமிழ்த் தலைமையைப் பொறுத்தவரை, எப்போதும் இதுதான் நிலைமையாக இருந்துள்ளது. சிவில் சமூக மக்கள் ஒன்றுகூடி, இதில் தலையிட்டு அரசியல்வாதிகளை நீண்ட விடுமுறையில் அனுப்பும் வரை இந்த நிலைமைதான் தொடரும். ஆனால், அவர்கள் செய்வார்களா? 'எமக்கேன் இந்த வம்பு, இந்தப் பிரச்னை' என்ற மனநிலையை விடுத்து, தங்கள் மண்ணின், தங்கள் சந்ததியினரின் ஒளி மயமான எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கும் முடிவை எடுப்பார்களா?

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# தமிழ்க்கட்சிகள் மீது ஜனாதிபதி முன்வைக்கும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு!



வீரகத்தி தனபாலசிங்கம்

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய கையோடு தனது தேசிய நல்லிணக்கத்திட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி திட்டம் குறித்து ஆராய்வதற்கு ஜூலை 26 பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டைக் கூட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதில் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய எந்த விடயத்திலும் இணக்கப்பாட்டை எட்டுவதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில், இவ்வாரம் பாராளுமன்றத்தில் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்து விசேட அறிக்கையொன்றை வெளியிடவிருப்பதாக அவரின் ஐக்கிய தேசிய கட்சி கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

ஜனாதிபதியின் இத்தகைய அறிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பதே வழமையாகும். ஆனால், இத்தடவை ஐக்கிய தேசிய கட்சியிடமிருந்து அறிவிப்பு வந்திருக்கிறது.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து மற்றைய சகல அதிகாரங்களையும் எவ்வாறு பரவலாக்கம் செய்வது என்பது குறித்து விளக்கம் அளிப்பார். 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்துவதுடன் தொடர்புடைய சகல யோசனைகளும் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார் என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையின் முன்னைய எந்தவொரு ஜனாதிபதியையும் விட கூடுதலாக பாராளுமன்றத்தில் உரையாற்றும் ஜனாதிபதியாக விக்கிரமசிங்க விளங்குகிறார். அவர் பதவிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் இரு தடவைகள் பாராளுமன்றத்தை கூட்டத்தொடர்களை ஒத்திவைத்து புதிய கூடடத்தொடர்களை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். அவரை சில அரசியல் அவதானிகள் "பாராளுமன்ற ஜனாதிபதி" என்று நகைச்சுவையாக வர்ணிப்பதுண்டு.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனது அரசாங்கம் இரு வருடங்களில் கட்டங் கட்டமாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று யாழ்ப்பாணத்தில் தைப்பொங்கல் விழாவில் வைத்து விக்கிரமசிங்க செய்த அறிவிப்பு தென்னிலங்கையில் சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் சக்திகளின் கடுமையான எதிர்ப்பை கிளப்பிய பிறகு இரு தடவைகள் அவர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உரைகளை நிகழ்த்தினார்.

ஒன்று இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தன்று (பெப்ரவரி 4) மாலை தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை. மற்றையது பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து நிகழ்த்திய (பெப்ரவரி 8) கொள்கை விளக்க உரை. இரண்டு உரைகளிலுமே அவர் 13 வது திருத்தம் குறித்து வாய்திறக்க வில்லை.

பாராளுமன்றத்தில் விக்கிரமசிங்க உரையாற்றிக்கொண்டிருந்தபோது வெளியே ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய பௌத்த பிக்குமார் 13 வது திருத்தத்தின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தியதைக் கண்டோம்.

இப்போது அவர் சிங்கள தேசியவாத சக்திகளின் எதிர்ப்பைக் குறைக்கும் ஒரு தந்திரோபாயமாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் இல்லாமல் அந்த திருத்தத்தை பலவீனப்படுத்தும் யோசனையை முன்வைத்துவிட்டு அது குறித்து சபையில் விசேட உரையாற்றவிருக்கிறார். பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டில் உரையாற்றியபோது இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் குறிப்பாக 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் முழுப்பொறுப்பும் அதிகாரமும் பாராளுமன்றத்துக்கே உள்ளது என்று கூறிய இரு வாரங்களுக்குள் அவரின் இந்த அறிவிப்பு வருகிறது.



சிங்கள தேசியவாத சக்திகளின் நெருக்குதல் காரணமாக இனப்பிரச்னை தீர்வு தொடர்பிலான தனது முன்னைய நிலைப்பாடுகளில் செய்யும் தளர்வுகளுக்கு தமிழரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும் ரணில்.

இந்த இரு வாரங்களில் ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுன உட்பட சிங்கள அரசியல் கட்சிகளினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் தனது முயற்சிகளுக்கு முன்னால் வரக்கூடிய சவால்களின் பாரதூரத்தன்மையை ஜனாதிபதிக்கு மீண்டும் உணர்த்தியிருக்கும். 13 வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் குறித்து விக்கிரமசிங்க பேசத் தொடங்கிய பிறகு கடந்த ஏழு மாதங்களில் அந்த திருத்தத்துக்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு முன்னரையும் விட அதிகமாகியிருக்கிறது.

ஆனால் அது பற்றி எதையும் கூறாமல் ஐக்கிய தேசிய கட்சியின் கடந்த வாரத்தைய அறிக்கை தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்ற வேறுபட்ட அபிப்பிராயங்கள் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு இடையூறாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது.

இது விடயத்தில் அந்த கட்சி தமிழ்க்கட்சிகளை குறைகூறுவது இது முதற்தடவையல்ல.

ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றபோது மெய்நிகர் வழியாக உரையாற்றிய ஜனாதி பதி தமிழ்க்கட்சிகள் ஒத்துழைப்பதற்கு தயங்குவதன் காரணமாக தன்னால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வைக்காண முடியாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதுபோக இடைப்பட்ட காலத்தில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்புகளின்போது அவர்களின் நிலைப்பாடுகள் குறித்து தனது அசௌகரியத்தை அவர் வெளிக்காட்டி வந்திருக்கிறார்.

இனப்பிரச்சினை திகதி குறிப்பிட்டு குறுகிய கால அவகாசத்திற்குள் அரசியல் இணக்கத்தீர்வை காணக்கூடிய ஒன்று அல்ல. ஆனால், விக்கிரசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு தீர்வைக் காண்பதற்கு திகதிகள் குறித்து அடிக்கடி பேசுகிறார். முதலில் இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு குறித்து பேசிய அவர் இறுதியாக இணக்கப்பாட்டை காண்பதற்கு ஜூலை 31 ஆம் திகதியையும் குறித்தார். இவ்வாறாக திகதிகள் குறிப்பதன் மூலமாக தன்னை ஒரு பொருந்தத்தன்மைக்கு ஏன் ஜனாதிபதி உட்படுத்துகிறார் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்குவைக்கும் அவரது அவசர அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு வசதியான முறையில் பல தசாப்தங்களாக தீர்வு காணப்படாமல் இருக்கும் சிக்கலான இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்க் கட்சிகளினால் நடந்துகொள்ள முடியாது.

அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்க்கட்சிகள் எப்போதும் ஒத்துழைப்பை வழங்கி வந்திருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு போதுமானதல்லாத - சிங்கள அரசியல் சமுதாயத்தின் குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் அரைகுறைத் தீர்வொன்றுக்கு தமிழர்களின் பிரதிநிதிகளினால் இணங்க முடியாது என்பதே யதார்த்த நிலை.

தமிழ்க்கட்சிகள் மத்தியில் காணப்படும் வேறுபட்ட கருத்துக்கள் தனது முயற்சிகளுக்கு ஒரு இடையூறாக இருப்பதாகவும் அந்த கட்சிகள் தன்னுடன் ஒத்துழைக்க தயங்குவதாகவும் குற்றஞ்சாடடும் விக்கிரமசிங்க இனப்பிரச்சினையின் வரலாற்றில் இதுகால வரையில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம் சிங்கள பௌத்த மேலாதிக்கப்போக்கும் தென்னிலங்கை கட்சி அரசியலுமே என்பதை தெரியாதவரல்ல. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அத்தகைய தீர்வு முயற்சியொன்றின் தோல்விக்கு எதிர்க்கட்சி தலைவராக இருந்த வேளையில் அவரும் கூட பெருமளவுக்கு பொறுப்பாக இருந்தார்.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான தனது விருப்பத்துக்கு தடையாக இருக்கும் சக்திகளையும் விக்கிரமசிங்க தெளிவாக அறிவார். அதனால் அரசியல் தீர்வைக் காண்பதற்கு தமிழ்க்கட்சிகள் ஒத்துழைக்காமல் இடையூறாக இருப்பதாக அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டு எந்த அடிப்படையும் அற்றது என்பது மாத்திரமல்ல உண்மையில் இடையூறாக இருந்துவரும் சக்திகளிடம் இருந்து தன்னை தனிமைப்படுத்த அவர் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடுமாகும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு காலங்காலமாக முட்டுக்கட்டையாக இருந்துவரும் தென்னிலங்கை சக்திகளையும் ஜனாதிபதியும் அவரது கட்சியும் குற்றஞ்சாட்டியிருந்தால் அவர்களின் முயற்சிகளில் ஒரு நேர்மையின் சாயல் இருக்கிறது என்று நம்பமுடியும்.

தமிழ்க்கட்சிகளை பொறுத்தவரை, ஜனாதிபதி முன்னெடுக்கும் முயற்சிகள் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய உருப்படியான அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கும் என்ற முழுமையான நம்பிக்கையில் அவருடன் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லவில்லை. இதுவரையான சந்திப்புக்களில் காணப்பட்டிருக்கக் கூடிய இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச இயந்திரத்தை வழிக்கு கொண்டு வரமுடியாதவராகவே அவர் இருக்கிறார்.

ஆனால், அதேவேளை சிங்கள தேசியவாத சக்திகளின் நெருக்குதல்கள் காரணமாக இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலான தனது முன்னைய நிலைப்பாடுகளில் தான் செய்யும் தளர்வுகளுக்கு தமிழ்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கிறார்.

என்றாலும், அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்ற பழி தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதாக தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் பகிரங்கமாக கூறுகிறார்கள். உருப்படியான எந்த முன்னேற்றமும் இல்லாமல், பழியைக் காரணம் காட்டி எவ்வளவு காலத்துக்கு இந்த தலைவர்கள் இந்த போக்கில் செல்லமுடியும் என்ற ஒரு கேள்வி எழுகிறது.

தமிழர்களுக்கு எவற்றை கொடுக்கக்கூடாது என்பதில் சிங்கள அரசியல் சமுதாயத்திற்குள், பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஒரு கருத்தொருமிப்பு காணப்படுகிறது. ஆனால், தமிழ் மக்களுக்கு தேவையானதை கேட்பதில் தமிழ் அரசியல் சமுதாயம் ஒருமித்து நிற்கமுடியாமல் முன்னென்றும் இல்லாத அளவுக்கு சிதறுண்டு போயிருக்கிறது. அது விடயத்தில் தமிழ்க்கட்சிகள் மீது குற்றஞ்சாட்டுவதற்கான அருகதை தமிழ் மக்களுக்கு இருக்கமுடியுமே தவிர ஜனாதிபதிக்கோ அல்லது சிங்கள கட்சிகளுக்கோ கிடையாது.

# 13 பிளஸ் 13 மைனஸாக இந்தியா பார்த்திருக்க மாறுகிறது!

**பனங்காட்டான்**

இங்கு ஆரம்பத்தில் குறிப்பிடுவதை வெறும் பகிடிக் கதையாக எவரும் எடுக்கக்கூடாது. இது ஓர் உண்மை நிகழ்வு.

1970களின் பிற்பகுதியில் இப்பத்தி எழுத்தாளர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது இது நிகழ்ந்தது. இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ஏராளமான கூட்டுத்தாபனங்கள் இயங்குகின்றன. இவற்றுள் ஒன்று அரசாங்க மர கூட்டுத்தாபனம் (State Timber Corporation). இதனை சுருக்கமாக அரச மர கூட்டுத்தாபனம் என அழைப்பது வழக்கம் - அரசங்கத்தை அரசு என அழைப்பது போன்று.

வானொலி செய்தி வாசிப்பாளர் ஒருவர் அரச மர கூட்டுத்தாபனம் என்ற பதத்தை, அரசமர கூட்டுத்தாபனம் என்று, முதலிரு சொற்களையும் ஒன்றாக்கி வாசித்து விட்டார். இந்தச் செய்தியைக் கேட்டவர்களுக்கு அரச மரங்களுக்கென தனியான கூட்டுத்தாபனம் ஒன்றை அரசாங்கம் உருவாக்கி விட்டதென்ற எண்ணம் வந்துவிட்டது.

புத்தர் அரச மரத்தின் கீழ் ஞானம் பெற்றதாலும் வெள்ளரசு மரம் அரசாங்கத்தால் புனித மரமாக பேணப்படுவதாலும் 'அரசமர; கூட்டுத்தாபனம்' என்று வாசிக்கப்பட்டது நேயர்களிடையே நம்பகத்தன்மைக்கு இடமளித்துவிட்டது. அந்தச் செய்தி வாசிப்பாளருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. அவர் காலமாகி இருபது வருடங்களாகி விட்டன.


இதனை இங்கு குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் இலங்கை அரசாங்கத்தின் தொல்பொருள் திணைக்களம் தமிழர் தாயக பூமியில் நில அபகரிப்பு, கட்டிடங்கள் அபகரிப்பு, வழிபாட்டுத் தலங்கள் அபகரிப்பு என்பவற்றின் தொடர்ச்சியாக அரச மரங்கள் (BO - Tree) இருக்குமிடங்களை தேட ஆரம்பித்துள்ளதுவே.

யாழ்ப்பாணத்தின் சுன்னாகம் பகுதியிலுள்ள கந்தரோடை எனும் இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் நேரடி நிர்வாகத்தில் சில பகுதிகள் பல வருடங்களாக உள்ளன. போர்க்காலத்தில் மாதகலில் காணி பிடித்து முகாம் அமைத்த கடற்படையினர் அங்கு சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று கூறி அதனை சம்பில் துறை என பெயரிட்டு உல்லாசப் பயணிகளுக்கான இடமாக மாற்றியுள்ளனர்.

நயினாதீவும் இவ்வாறுதான் பௌத்த விகாரைக்கு இடமளித்து இன்று நாகதீப என்ற பெயர் மாற்ற சர்ச்சைக்கு உள்ளாகி நிற்கிறது. இப்பிரதேசத்தையும் சிறீலங்கா கடற்படையே பாதுகாத்து வருகிறது. கடந்த வருடத்தில் வன்னிப் பிராந்தியத்தின் பல இடங்களிலுள்ள சந்திகளில் திடீரென அரச மர கன்றுகளும் புத்தர் சிலைகளும் முளைத்து பரம்பரையாக அங்கு வாழ்ந்துவரும் தமிழருக்கு அச்சம் ஏற்படுத்தின.

இப்போது தொல்பொருள் திணைக்களத்தின் ஊடுருவலுக்குள் அகப்பட்டிருப்பது யாழ்ப்பாணம் சுழிபுரத்திலுள்ள பறளாய் முருகன் ஆலய பகுதி. இந்த ஆலயத்துக்கருகில் சடைத்து வளர்ந்து நிற்கும் நூற்றாண்டு பழமை வாய்ந்த அரச மரத்தை சங்கமித்தையுடன் தொடர்புடையது என வர்த்தமானி அறிவித்தல் வந்துள்ளது.

இதற்கான முன்னெடுப்பு கடந்த ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பௌத்த பிக்குகள் சிலர் கூட்டமாக இங்கு சென்று குறிப்பிட்ட அரச மரத்தின் கீழே புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முற்பட்டபோது ஆலய பக்தர்களும் ஊர் மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் பிக்குகள் அங்கிருந்து நகர நேர்ந்தது.



**தொல்பொருள் திணைக்களம் சங்கமித்தையின் பெயரில் தமிழர் தாயகத்தில் அரச மரங்களைத் தேடி அலைகிறது. ரணில் விக்கிரமசிங்க இந்தியா பார்த்திருக்க 13ஐ மைனஸாக்க முனைகிறார். இதுதான் மோடி சொன்னதா? இப்படித்தான் ரணில் விளங்கினாரா?**

இப்போது பதினைந்து மாதங்களின் பின்னர் அரச வர்த்தமானி மூலம் குறிப்பட்ட அரச மரத்தை தொல்பொருள் சின்னமாக அறிவித்து பிரச்சனையை உருவாக்கியுள்ளது ரணிலின் ஆட்சி.

அநேகமாக இந்து - சைவ ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களை சோலை வனமாக்கும் வகையில் சடைத்து வளரக் கூடிய அரச மரம், ஆல மரம், வேம்பு மரம் என்பவை வளர்க்கப்படுவது வழக்கம். ஆலயங்களின் தீர்த்தக் கேணிகளை அண்மித்தும் இவை வளர்க்கப்படுவது எழுதாத ஒரு மரபாக தொடர்ந்து வந்துள்ளது. தலவிருட்சம் என்ற சொற்பதம் தமிழர் வாழ்வுடன் இணைந்திருப்பதற்கு இவைகளே முக்கியமான காரணிகள்.

அது மட்டுமன்றி தமிழர் தாயக பூமியில் பெரும்பாலான வீதிச் சந்திகளில் இந்த மரங்கள் பருத்து சடைத்து வளர்ந்திருந்தன. இவற்றின் அடிப்பாகத்தில் வேல், சூலம் போன்றவைகளை நாட்டி அப்பகுதி மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். வீதிகள் அகலிப்பு, மின்விநியோகத்துக்கான மின்கம்பங்கள் நாட்டல் போன்றவைகளால் இவைகள் தறிக்கப்பட்டுள்ளன.

இன்று அரச மரங்களையே தொல்பொருள் திணைக்களம் தமிழர் நிலப்பரப்பில் தேடி அலைகிறது என்றால், அதுவே தமிழரின் வாழ்விடத்துக்கான ஆபத்தாகவும் மாறிவருகிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வானொலி செய்தி வாசிப்பாளர் தவறாக உச்சரித்த 'அரசமர' கூட்டுத்தாபனம் நிதர்சனமாகி விடுமோ என அஞ்ச வைக்கிறது.

கடந்த வாரப் பத்தியின் இறுதியில் ரணிலின் கையில் சிக்கியுள்ள 13வது திருத்தம் குரங்கின் கை பூமாலையாகி வருகிறது என்றும், அதிகார பகிர்வு எதுவும் இல்லாத 13ஐ பிய்த்துப் பிடுங்குவதால் குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகவும் மாறுகிறதோ என்றும் குறிப்பிட்டிருந்தேன். தமிழர் பகுதியிலுள்ள அரச மரங்கள் மீது ரணில் கண் வைத்திருப்பதைப் பார்க்கும்போது, குரங்குகள் தாவித் திரிய மரங்களைத் தேடுவதைப் போன்ற நிலைக்கு ரணில் வந்து விடுவார் போலவும் தெரிகிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13ம் திருத்தம் உயிரற்ற உடலாக ஊசலாட ஆரம்பிக்கிறது. ஒப்பந்தம் வரையப்பட்டபோது தமிழருக்கான அதிகாரப் பகிர்வுக்காக வடக்கில் கிழக்கில் மட்டுமே மாகாண சபை நிர்வாகம் என்பது குறிப்பிடப்பட்டது. அவ்வாறு செய்தால் தமிழருக்குத் தனிநாடு கொடுப்பதாக சிங்களவர் கருதுவார்கள் என்று கூறி, ஒன்பது மாகாணங்களுக்கும் மாகாண சபைகள் என்று மாற்றியவர் அன்றைய அதிஉத்தமரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன. சிங்களப் பிரதேசங்களின் ஏழு மாகாண சபைகளும் ஒழுங்காக செயற்பட, தமிழர் தாயக மாகாண சபைகளை கருச்சிதைவுக்குள்ளாக்கியது ஆட்சி பீடம்.

மகிந்த ராஜபக்ச 13க்கான அதிகாரங்களை 13 பிளஸ் என்று கூறி ஏமாற்றினார். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானதும் 13ஐ முழுமையாக நிறைவேற்றி தமிழர் பிரச்சனையை தீர்க்கப் போவதாகக் கூறினார். இதற்கென ஒரு வருடமாக அவர் எடுத்த அத்தனை முயற்சிகளும் சொன்னதற்கு எதிர்மாறாகவே அமைந்தன. வண்டிலுக்குப் பின்னால் மாடுகளைக் கட்டி வண்டிலைத் தள்ளும் விளையாட்டுப் போன்றது இவருடையது.

பல சுற்றுப் பேச்சுகளை தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தியவர் பின்னர், சகல கட்சித் தலைவர்களையும் அழைத்து கூட்டம் நடத்தினார். இந்தியா புறப்படுவதற்கு முன்னர் பொலிஸ் அதிகாரம் தவிர மற்றெல்லாவற்றையும் உள்ளடக்கியதாக 13ஐ நடைமுறைப்படுத்தப் போவதாக தெரிவித்தார்.

கடந்த 36 வருடங்களாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமற்தான் மாகாண சபைகள் இயங்கின என்பது வரலாறு. திடீரென பொலிஸ் அதிகாரம் இல்லையென கூறுவது புதிரானது. ஏற்கனவே இல்லாததை தர முடியாது என்று கூறுவது ஏமாற்று என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

அதிகாரப் பகிர்வு பற்றி பின்னர் பேசலாம், இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று சகல அரசியல் கட்சிகளும் கேட்கின்றபோது ரணிலுக்கு மூக்கில் கோபம் கொப்பளிக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தாமே என்பதை மறந்து, தமது கைககள் கட்டப்பட்டிருப்பது போன்ற நடகமாடி சகல முடிவுகளும் நாடாளுமன்றத்துக்கே உரியவை என்று கூறி தம்மை ஜனநாயக நாயகனாக காட்ட முற்படுகிறார்.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், மாகாண சபை தேர்தலை விரைந்து நடத்துமாறும் அண்மைய இந்திய விஜயத்தின்போது பிரதமர் நரேந்திர மோடி ரணிலிடம் நேரடியாகக் கூறியதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் தமிழ் தலைவர்களை அழைத்து கூறியுள்ளார்.

இதுபற்றி எதுவுமே வெளிப்படுத்தாத ரணில் நாடாளுமன்றத்தில் 13ம் திருத்தம் தொடர்பாக இந்த வாரத்தில் முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டது. இப்போது ஆகப் பிந்தியதாக வந்துள்ள தகவல், 13வது திருத்தம் தொடர்பாக சகல கட்சித் தலைவர்களிடமிருந்தும் அவர்களது ஆலோசனையை இந்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி செயலகம் கேட்டுள்ளது.

இந்திய பிரதமர் 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூறியது மறைக்கப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல்களை இருக்கும் அதிகாரங்களோடு நடத்துமாறு சகல அரசியல் கட்சிகளும் கேட்பதற்கு பதில் இல்லை. மாறாக, ஏதோ புதிதாக 13ம் திருத்தம் உருவாக்கப்படுவது போன்று சகல கட்சித் தலைவர்களிடமிருந்தும் ஆலோசனை கேட்கப்படுகிறது.

இந்தியாவின் கரிசனையும் அக்கறையும் ரணிலுக்குப் புரிந்ததா? மோடி சொன்னதற்கு ரணில் என்ன பதில் அளித்தார்? 13ஐ ரணில் மைனஸ் ஆக்க முனைவது இந்தியாவுக்கு தெரியவில்லையா?

# 13 தொடர்பாக தமிழர் தரப்பின் அணுகுமுறைகளில் மாற்றம் அவசியமா?

கந்தையா அருந்தவபாலன்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அண்மைக்கால நட வடிக்கைகள் தொடர்பாக வடக்குத் தெற்கு அரசியல் வாதிகளின் வெளிப்பாடுகள் ஒன்றுக்கொன்று எதிராக அமைந்தாலும் ஒரு விடயத்தில் மட்டும் இருதரப்பும் ஒத்த கருத்துடையவராக உள்ளனர். அதாவது அவரது வெளிப் பாடுகள் தமிழருக்கான அரசியல் தீர்வு காணும் உண்மையான நோக்கத்துக்காக வன்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்தும் ஒரேநோக்கத்துக்கானது என்பதை இரு தரப்பும் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்வுண்மையைத் தெரிந்து கொண்ட பின்னும் இரு தரப்புகளிலிருந்தும் தேவையற்றதும் அளவுக்கதிகமானதுமான எதிர்வினைகளைகளை அவை ஏன் தோற்றுவித்து வருகின்றன? இவ்விரு தரப்புகளும் இவ்விடயத்தை ரணிலைப் போன்று வேறு நோக்கங்களுக்காக கையாள விரும்புகின்றனவா? இதனாற்றான் இவ்விடயம் தொடர்பாக இருதரப்புப் பொதுமக்களும் பௌத்த பீடங்களும் அமைதியாக உள்ளனரா? போன்ற ஐயங்கள் எழுவது தவிர்க்க முடியாதவை.

தமிழரின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை வழங்குவதற்கு எந்தவொரு சிங்களத் தலைவரும் விரும்புவதில்லை என்பது இந்நாட்டின் வரலாறு என்பது ஒருபுறமிருக்க, அதற்கு மாறாக ஒரு சிங்களத்தலைவர் விரும்புகிறார் என்றும் அவரின் கீழ் உறுதியான பாராளுமன்ற அதிகாரமும் இருக்கிறது எனக்கொண்டால் கூட அவரால் தான் விரும்புவதை ஒருபோதும் நிறைவேற்ற முடியாதவாறு இந்நாட்டில் அவர்களாலேயே உருவாக்கி வளர்க்கப்பட்டுவரும் பேரினவாதக் கட்டமைப்புகள் மிக உறுதியாகச்செயற்படும் நிலையே காணப்படுகிறது. இவ்வாறான ஒருநிலையில் பாராளுமன்றில் சொந்தப்பலமில்லாது, தீவிர பேரினவாதக் கொள்கையுடைய கட்சியொன்றில் தங்கியிருப்பவரும் மக்களால்தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியுமான ரணிலால் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு மட்டுமல்ல சாதாரண பிரச்சினைக்கே தீர்வுகாண முடியாது என்பதை விளங்கிக் கொள்ள விசேட அறிவொன்றும் தேவையில்லை. தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறல்களையே கட்டுப்படுத்த முடியாத அல்லது விரும்பாத ரணில் இன்றைய நிலையில் அரசியல் தீர்வு தருவார் என நம்புவது கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போவான் என்பதைப் போன்றதே. பிரச்சினையென்ற பந்தை இயன்றவரை எதிர்த்தரப்பின் வளையத்துக்குள் தள்ளி விட்டுவிட்டு சௌகரியமாகக் காலத்தைக் கடத்த ரணில் முயற்சிக்கிறார் என்பதே உண்மை. இதனாற்றான் தங்கள் இருப்புக்கு இனவாதம் என்ற ஒன்றை மட்டுமே நம்பியிருக்கும் கம்மன்பில, வீரசேகர, வீரவன்ச போன்ற உதிரிகளைத் தவிர ஏனைய பேரினவாதத் தரப்புகள் குறிப்பாக பௌத்த பீடங்கள் அமைதியாக உள்ளன. சஜித் தரப்பும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு அடக்கி வாசிக்கின்றது.

இவ்வாறானதொரு நிலைப்பாடு தென்பகுதியில் காணப்படும்போது 13 தொடர்பாக தமிழர் தரப்பு ஏன்அதிகம் எதிர்வினை ஆற்றவேண்டும்? தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகளைப் பொறுத்த மட்டில் 13 தொடர்பாகப் பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும் எந்தவொரு தரப்பும் அது தான் தமிழர்க்கான இறுதி அரசியல் தீர்வு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. உயர்ந்த மட்ட சமஷ்டிக் கட்டமைப்புத் தான் தங்கள் கோரிக்கை என்பதை அவை தொடர்ந்து வெளிப்படுத்தியே வருகின்றன. எனினும் தற்போதைய அரசியல் களநிலைமகள் பற்றிய ஒவ்வொரு கட்சியினதும் மதிப்பீட்டுக்கேற்ப அவற்றின் அணுகுமுறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உண்மையில் இவ்வேறுபாடு இறுதி இலக்கை அடைவதற்கான பயணமுறை தொடர்பான வேறுபாடு மட்டுமே. தமிழ்த்தேசிய முன்னணியைப் பொறுத்த மட்டில் ஒற்றையாட்சி முறைமை இல்லாத சமஷ்டி முறையிலான புதிய அரசியலமைப்பு ஒன்றின் மூலமே நிரந்தர அரசியல் தீர்வு சாத்தியமாகும் என்ற கொள்கையில் உறுதியாக இருப்பதுடன் அதிலும் குறைந்த எந்தவொரு ஏற்பாட்டையும் தற்காலிகமாகவேனும் ஏறெடுத்துப் பார்க்க அக்கட்சி தயாராக இல்லை. ஆனால் அதனை அடைவதற்காக எவ்வகையான உத்திகளைக் கொண்டுள்ளது? அந்த உத்திகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது? அவ்வாறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தால் அவற்றினால் இதுவரை அடையப்பட்ட பெறுபேறுகள் யாவை? அப்பெறுபேறுகள் இலக்கினை நோக்கிய முன்னேற்றத்தை நம்பிக்கையுடன் பிரதிபலிக்கிறதா? போன்ற கேள்விகளுக்கு விடை தேடுவதன் மூலம் அது தன்னை மீளாய்வுக்கு உட்படுத்த முடியும். கோட்பாடுகள் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் அவற்றை அடைந்து கொள்வ தற்கான நடைமுறைகள். மறுபுறத்தில் மற்றைய தமிழ்க் கட்சிகள் பெயரளவில் சமஷ்டியை உச்சரிச்சாலும் முழுமை யான 13 ஐ கோரி நிற்கின்றன. அதை விடக் குறைந்தாலும் அதை ஏற்பதற்கு அவை பின்நிற்கப் போவதில்லை. அதற்கு அவர்கள் முன்வைக்கும் நியாயம் உள்ளதை முதலில் பாதுகாத்துக் கொண்டு உயர்வதைப் பற்றி பிறகு சிந்திப்போம் என்பதாகும். இவர்கள் கூறும் கருத்தையே அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் அவர்களும் வெளிப்படுத்தியிருந்தார். மொத்தத்தில் ‘நான் பெரிசு நீ சிறிசு’ ‘நான் வெள்ளை நீ கறுப்பு’ என்று கட்சி அரசியல் செய்வதை விட எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியிடமும் அவர்கள் கூறும் சமஷ்டியை அடைந்து கொள்வதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் கிடையாது என்பதே யதார்த்தம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் போது உச்சரிக்கப்பட்ட சர்வதேசம் உதவும் என்ற வெளிமுகம் நோக்கிய உத்தி பல்வேறு கசப்பான பட்டறிவைத் தந்ததையும் மறந்து 2009 ஆண்டிற்குப் பின் மீண்டும் கட்சிகளால் அது உச்சரிக்கப்படுவதைத் தவிர உருப்படியாக வேறு எதனையும் காணமுடியவில்லை. குறைந்தது இந்தியாவைக்கூட அக்கட்சிகளால் சரியாகக் கையாள முடியவில்லை. இந்தியா தான் தனதுதேவைக்கேற்ப அக்கட்சிகளை கையாளும் நிலை காணப்படுகிறது. இதை அக்கட்சிகள் உணரவில்லையா? அல்லது உணர்ந்தும் உணராதவை போல பாசாங்கு செய்கின்றனவா?

> தேர்தலும் அதிகாரப் பகிர்வும் ஒரே கோட்டிலானவை என்பதைச் சொல்லத் தெரிந்த சுமந்திரனுக்கு தேர்தல் நடப்பதற்கான சாத்தியம் உண்டா? அல்லது தேர்தலா அதிகாரப் பகிர்வா முக்கியமானது? என்பதை ஏன் புரிந்து கொள்ளமுடியாமல் போனது? அதுவும் அதிகாரங்கள் தொடர்பாக பேச அழைக்கப்பட்ட மேசையில் தேர்தலை வலியுறுத்த வேண்டிய அவசியமென்ன?

இவ்வாறானதொரு பலவீனமான தரப்பாக இருந்து கொண்டு பேரம் பேசு தல் சாதகமா? அல்லது சாது ரியமாக பந்தை எதிர்த்தரப்பின் வளை யத்தினுள் தட்டிவிடுவது சாதகமா? என்பதை கட்சிகள் ஆராயவேண்டும். அதாவது எமக்கான அரசியல் தீர்வாக நாம் சமஷ்டியையே கோருகிறோம், இடைக்கால ஏற்பாடாக 13 இன் முழுமையான அமுலாக்கத்தை பரிசீலிக் கத் தயாராக உள்ளோம், எனவே இது தொடர்பாக நீங்கள் முதலில் உங்கள் கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவை எடுத்தபின் அதுதொடர்பாக எங்களுடன் பேசுங்கள், அப்போது நாம் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியும் என்ற நிலைப்பாட்டை தமிழ்த்தரப்பு ஒற்றுமையாக முன்வைப்பதன் மூலம் ரணில் கையாளும் அதே உத்தியை தமக்குரியதாக மாற்ற முடியும். ஏனெனில் 13 ஐ ஒழிப்பதற்குச் சிங்களத் தரப்பு ஒன்றுபடுமேயொழிய அதை முழுமையாகத் தர ஒருபோதும் ஒன்றுபடாது. இதன்மூலம் தமிழர் தரப்புக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையில்லை, பேச்சுவார்த்தையில் பங்கெடுக்க மறுக்கிறது என்ற சிங்களத் தரப்பின் போலியான பரப்புரைகளையும் முறியடிக்க முடியும். உண்மையில் பேச்சுவார்த்தை என்பது வெறும்நாடகம் என்பதைத் தெரிந்து கொண்டும் தமிழ்த் தரப்பு அப்பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பது தங்கள்மீது மேற்குறித்தவாறான பழியைப் போட்டுவிட்டு சிங்களத் தரப்பு தப்பிக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

அதே வேளை ஓர் இடைக்கால ஏற்பாடாக 13 இன் முழுமையான அமுலாக்கத்தை ஏற்றுக் கொள்வதில் தமிழ்க் கட்சிகளுக்கு ஒவ்வாமை வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் தமிழ்த் தேசிய முன்னணியைத் தவிர ஏனைய கட்சிகள் யாவும் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஏற்று அதற்கான தேர்தலில் போட்டியிட்டு அதன்மூலமான சலுகைகளை அனுபவித்தவை தாம். தமிழ்த் தேசிய முன்னணியும் இதே மாகாண சபைக்குத் தேர்தல் நடந்தால் அதில் போட்டியிடுவதற்குத் தன்னைத் தயார்படுத்தி வருகிறது. அதற்கும் ‘விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை’ என்றவாறான சமாளிப்புகளை அக்கட்சி முன்வைக்கக் கூடும். எனவே இப்போதைய மாகாணசபையைத் தீட்டாகக் கருதாத இக்கட்சிகள் 13 இன் முழுமையான வடிவத்தை எதிர்ப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? இறுதியாக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கலந்துரையாடலின் போது மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பற்றிப் பேசுவதா? தேர்தலா? என்ற விவாதத்தில் தமிழ்த்தரப்பு எதிர்கட்சிகளைப் போல முதலில் தேர்தலை வலியுறுத்தியதைப் பார்த்தோம். தேர்தலும் அதிகாரப் பகிர்வும் ஒரே கோட்டிலானவை என்பதைச் சொல்லத் தெரிந்த சுமந்திரனுக்கு தேர்தல் நடப்பதற்கான சாத்தியம் உண்டா? அல்லது தேர்தலா அதிகாரப் பகிர்வா முக்கியமானது? என்பதை ஏன் புரிந்து கொள்ளமுடியாமல் போனது? அதிகாரம் குறைந்த மாகாண சபைக்கான தேர்தலை வரவேற்போர் காவல்துறை அதிகாரமில்லாவிடில் அதை ஏற்கமாட்டோம் என்பதில் ஏதாவது தர்க்கரீதியான நியாயங்கள் உள்ளனவா? அதுவும் அதிகாரங்கள் தொடர்பாக பேச அழைக்கப்பட்ட மேசையில் தேர்தலை வலியுறுத்த வேண்டிய அவசியமென்ன? தமிழ்த்தரப்பு எதிர்க் கட்சியல்ல. வேண்டுமானால் சலுகைகளுக்காக எதிர்கட்சி வேடமிடலாம். சிறீலங்கா பாராளுமன்றில் தமிழ்த்தரப்பு ஒருபோதும் உண்மையான எதிர்க்கட்சி யாக இருக்கமுடியாது. எதிர்க்கடசிகளுக் குத் தேர்தல் முக்கியம். ஆனால் தமிழர்களுக்கு தேர்தலைவிட முக்கியமான விடயங்கள் பல உள்ளன. தேர்தல்கள் மூலம் தலைவர்கள் மாறலாம் ஆனால் தமிழ்மக் களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவ தில்லை என்பது கடந்த காலகசப்பான பட்டறிவு. இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்த் தரப்புக்கு ஊறில்லாத வாறு இப்பிரச்சினையை தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகக் கையாள வேண்டுமென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ●

# தமிழரின் தீர்வுக்கு இந்தியா உதவுமா?

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் கரிசனை என்பது தற்போது அதிகம் பேசப்படும் ஒரு விடயமாகியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை எட்டும் முயற்சிக்கு இந்தியாவின் பங்களிப்பு மிக அவசியம் என தமிழ்க் கட்சிகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றன.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இந்தியாவை நம்பத் தயாரில்லை என்று வெளிப்படையாகவே கூறிவரு கின்றது.

ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழரின் தீர்வு இந்தியாவின் கைகளிலேயே உள்ளது எனவும் இந்த விடயத்தில் இந்தியா இதய சுத்தியுடன் நடந்து கொள்ளும் எனவும் நம்பிக்கை கூறி வருகிறார்கள்.

மறுபுறத்தில் தெற்கில் 13ஆவது திருத்தம் ஊடாக இந்தியா தமிழருக்கு அதிகாரங்களை வழங்க எத்தனிக்கிறது என சிங்களக் கடும்போக்குவாதிகள் கூச்சல் போடத் தொடங்கி விட்டார்கள்.

ஆனாலும் இலங்கை அரசு இந்தியாவின் உதவியை தொடர்ச்சியாக நம்பியுள்ளது. நெருக்கடியான பல நேரங்க ளில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவி கள் நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதற்கு உதவியிருக்கிறது.

ஆயினும் அரசியல் ஆய்வாளர்கள் பலர் இலங்கையின் இறையாண்மைக்குள் இந்தியா மூக்கை நுழைக்காது எனக் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில் தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்கு குறித்து யாழ். மக்கள் என்ன சொல்கிறார்கள்? சிலரின் கருத்துக்கள் இங்கே.....!

## இந்தியா ஒத்துழைக்கும்




**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர்
யாழ்ப்பாணம்.

இந்தியாவானது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக தமிழ் மக்களுக்குரிய தீர்வைப் பெற்று கொடுக் கிற முயற்சியை எடுத்து வருகின்றது.

இலங்கையில் இனக் கலவரம் தோன்றிய காலத்திலி ருந்து இந்தியா தோள் கொடுத்தது. அதேபோல் வடம ராட்சியில் இடம்பெற்ற ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்கு தலின்போதும் மக்களின் உணவு பற்றாக்குறையை கருத் தில் கொண்டு இந்திய உணவுக் கப்பல் இலங்கைக்கு வந்தது. இலங்கை கடற்படை அதனை திருப்பி அனுப் பிய சமயத்தில் மீண்டும் இந்திய போர் விமானங்கள் வருகை தந்து தமிழ் பிரதேசங்களில் உணவுப் பொட்ட லங்களை வீசி இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு செய்தியை தெளிவாக கூறியது. இலங்கை தமிழ் மக்கள் பாதிக்கப்படும்போது நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதை இந்தியா அப்போது கூறியது.

இலங்கை தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமையை இந்தியா பெற்றுக் கொடுக்கப்போகின்றது. பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளை கண்டிருக்கின்றது. உரிய பொறிமுறையை கையாளுகின்றது என்பதுதான் சிங்கள மக்களுடைய ஊகம்.

அதை தான் நாமும் கருதுகின்றோம். எங்க ளுக்கு முன்னால் தற் பொழுது இருக்கின்ற ஒரே ஒரு பொறிமுறை இலங்கை - இந்திய ஒப் பந்தத்தில் உள்ள விடயங்களை நடை முறைப் படுத்துவதன் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்பப் புள்ளியாக கொண்டு செயல் படுத்துவதுதான்.

சர்வதேசம் கூட குறிப்பாக அமெரிக்க தூதுவர்கள் கூட சொல்லி இருக்கின்றார்கள். சர்வதேசம் ஒரு நாட்டின் உள்ளக வரையறைக்குள் தலையிட முடியாது.

குறிப்பாக அரசியல் எல்லைக்குள் வரம்பு மீறி- எல்லை மீறி வர முடியாது. அதாவது இறையாண் மையை மீற முடியாது எனக் கூறியிருக்கின்றார்கள்.

இப்பொழுது இருக்கிற ஒருபொறிமுறை என்பது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தல்.

அதில் இந்திய அரசாங்கம் மிகவும் கரிசனையாக உள்ளது. தமிழ் மக்களுக்கு இருக்கின்ற உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து பொலிஸ், காணி அதிகாரங்களை யும் பெற்று தமிழ் மக்கள் அங்கீகாரம் உள்ள மக்களாக வாழவேண்டும் என்பதை இந்தியா விரும்புகின்றது.

நிச்சயமாக சர்வதேச சமூகம் இந்த விடயத்தை முன்னெடுத்த போதிலும் அது பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. தற்போது உள்ள நிலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இந்தியா முழுமையாக ஒத்துழைக்கும் என்பது எமது நிலைப்பாடு.




## '13' ஒன்றுக்கும் உதவாது

**சிவநாதன்**
ஓய்வு பெற்ற ரயில் நிலைய அதிபர்
மீசாலை

தற்பொழுது 13ஆவது திருத்த சட்டம் தொடர்பில் பலரும் பேசுகின்றார்கள். இந்தியா கொண்டு வந்த இந்த சட்டமானது எங்களுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. இந்தியா தமிழருக்கு உதவப் போவது மில்லை. சீனாவும் உதவப்போவதுமில்லை

எந்த பிராந்திய வல்லரசுகளும் எங்களுக்கு உதவப் போவதில்லை. தங்கள் நலனுக்காக எங்களை பயன் படுத்தி மக்களைப் பலிக்கடாவாக்கியமை பற்றி தமிழ் மக்கள் நன்றாக படித்திருக்கின்றார்கள்.

இதனால் இந்தியாவோ எந்த ஒரு வல்லரசு நாடோ எங்களுக்கு உதவப் போவது இல்லை. அவர்களுடைய பிராந்திய நலனை கருத்தில் கொண்டு செயல்படுகிறார் களே தவிர தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை கொள்ள மாட்டார்கள்.

தமிழ் தலைவர்கள் இதனை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இந்தியா ஏதோ பண்ணும் படைக்கும் என நினைக்கின்றார்கள். ஒன்றும் நடக்காது. இந்தியா ஒன்றும் நமக்கு செய்யப் போவதில்லை.

அதேபோல ரணில் விக்கிரமசிங்கவும் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் வல்லரசு நாடுகளுக்கு தமிழ்ப் பிர தேசத்தில் உள்ள வளங்களை விற்கப் பார்க்கிறாரே தவிர தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்குவதற்கு யோசிக்க வில்லை. தமிழ் மக்கள் இதனை வெகுவிரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

எனவே இந்தியா தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத் தில் தமிழ் மக்கள் நலன் சார்ந்த செயல்படாது என்பதே எனது கருத்தாகும். குறிப்பாக இந்தியா மாத்திரம் அல்ல எந்த ஒரு வல்லரசு நாடும் தமிழ் மக்களின் தீர்வு விடயத் தில் தமிழருக்கு சார்பாக செயல்படமாட்டாது.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் எமக்கு ஒரு வரப்பிரசாதம்




**ஜெயகாந்தன்**
ஊடகவியலாளர்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது இலங்கை தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். அதனை ஆரம் பப் புள்ளியாக வைத்து நாம் நிரந்தர தீர்வினை அடைவதற்கு நகரவேண்டும்.

எனினும் கடந்த காலங்களில் தமிழ்த் தலைமைகளுக்கும் சிங்கள அரசாங்கங்க ளுக்கும் புரிந்துணர்வு இன்மை காரண மாக அது பறிக்கப்பட்டது. அது இல்லா மல் செய்யப்பட்டது என்பது தான் உண்மை.

ஆனால் நீண்ட காலமாக ஒரு சில கட்சிகள் இந்த 13ஆவது திருத்தச் சட் டத்தை நடைமுறைப்படுத்துவது எமக்கு ஆரம்ப புள்ளியாக இருக்கும் எனக் கூறியபோதும் இதர தமிழ்க் கட்சிகள் நிராகரித்து தமக்கு சமஷ்டி வேண்டும் எனக் கூறி வருகின்றன.

அண்மையில் அனைத்து கட்சிகளும் அதுதான் நமக்கு சாத்தியமான விடயம். எனவே அதனை நாங்கள் நடைமுறைப் படுத்தவேண்டும் என கூறி இருக்கின்றார் கள் அதேபோல மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற விடயங்கள் கூட பேசப்பட்டது.

அதேபோல இந்திய அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்துவதில் கரிசனையாக உள்ளது. எனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான வழிமுறைகளை தமிழ்க் கட்சிகள் முன்னின்று செயல்படுத்த வேண்டும்.

## இந்தியா ஒன்றும் செய்யாது



**கோகுலன்**
பிரபல வர்த்தகர், சாவகச்சேரி

13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற் றப்பட்டால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்பது தமிழ் அரசியல் வாதிகளின் நோக்கமாகக் காணப்படு கின்றது

இவ்வளவு காலமும் இந்தியா அயல் நாடாக இருந்தபோதிலும் எந்தவிதமான ஒரு சலுகையும் செய்யவில்லை. தமிழ ரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவர்கள் செயல்படவும் இல்லை. தங்கள் நாட்டை இன்னும் மேம்படுத் துவதற்காக எங்களை தமிழ் மக்களை ஏமாற்றி தாம் முன்னேறப் பாதை தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதனை எங்கள் அரசியல் தலை வர்கள் முற்று முழுதாக நம்பி இந்தியா நமக்கு உதவப் போகின்றது, இந்தியா தீர்வினை பெற்று தரப் போகின்றது எனக் கூறுகின்றார்கள்.

அரசியல்வாதிகளும் மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்கவில்லை. இந்தியா மாத்திரமல்ல சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் தமிழருக்கான தீர்வு விடயத் தில் எதுவும் செய்யப் போவதில்லை.

அவர்கள் தமிழர்கள் பற்றி பேசுவது தமிழர் பகுதியில் உள்ள வளங்களைச் சுரண்டுவதற்காக மாத்திரமே தவிர தமிழ் மக்களின் நலனில் எந்தவித அக்கறையும் காட்டப் போவதில்லை. அதனை எமது தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் மீது கரிசனை இல்லாததன் காரணமாக இவ்வாறான வல்லரசு நாடுகளின் வலை களுக்குள் விழுகின்ற நிலை காணப் படுகின்றது.

இது மாற்றியமைக்கப்பட வேண்டும். மக்கள் விழிப்படையவேண்டும். இந்தியாவோ அல்லது எந்த வல்லரசு நாடோ தமிழர்களின் தீர்வு விடயத்தில் எந்த ஒரு அழுத்தத்தையும் இந்த அரசாங்கத்தை கொடுக்கமாட்டாது என மக்களுக்கு நன்றாக விளங்கும்.

ஆனால் தற்பொழுது 13 ஆவது திருத்தச் சட்டம் அமல்படுத்தினால் தமிழர்களுக்குரிய தீர்வு கிடைத்துவிடும் என பேசப்படுகின்றது. ஆனால் 13ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப் படுவதாக இருந்தால் அது சிங்கள மக்களின் ஆணை உடனேயே நிறை வேற்ற முடியும். இந்தியா மாத்திரம் அதனை நிறைவேற்றுவது என்பது சாத்தியப்படாத ஒன்றாகும்.




**திரைப்படம் - டிடி ரிட்டன்ஸ்**
**இயக்கம் - பிரேம் ஆனந்த்**
**இசை - ஆப்ரோ**
**நடிப்பு - சந்தானம், சுரபி, பெப்ஸி விஜயன்**

பேய் படம் என்றால் பயமுறுத்த வேண்டாம் சிரிக்க வைக்கலாம் என 'தில்லுக்கு துட்டு' படம் மூலம் சொல்லி வெற்றியும் பெற்றவர் சந்தானம். அதே பாணியில் மூன்றாம் பாகமான இந்தப் படத்திலும் பின்பற்றி ரசிக்க வைத்திருக்கிறார். 'டிடி ரிட்டன்ஸ்' அதன் மூன்றாம் பாகம்தான் என படத்திலேயே சொல்லிவிட்டார் சந்தானம்.

முந்தைய படங்களில் வழக்கமான சந்தானத்தைப் பார்க்க முடியாமல் போக இந்தப் படத்தில் அவரை மீண்டு(ம்) அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் பிரேம் ஆனந்த். எந்த அவதூறும் இன்றி தான் மட்டும் நகைச்சுவை செய்யாமல் மற்றவர்களையும் சுவை குன்றாமல் செய்ய வைத்திருக்கிறார் சந்தானம்.




புதுச்சேரியில் மதுபான கடை உரிமையாளராக இருப்பவர் பெப்ஸி விஜயன். அவரின் வீட்டில் பிபின் தலைமையிலான கூட்டம் ஒன்று கொள்ளையடிக்க திட்டமிடுகிறது. அவர்கள் கொள்ளையடித்த பணம் மற்றொரு கூட்டமான மொட்டை ராஜேந்திரனிடம் கைமாறி பின்னர் சந்தானத்திடம் வந்து சேர்கிறது. அந்தப் பணத்தை ஊருக்கு வெளியே ஒரு காட்டு பங்களாவில் மறைத்து வைக்கிறார்கள் சந்தானத்தின் நண்பர்கள். அது பற்றி தெரிய வந்த விஜயன், சந்தானத்தின் காதலி சுரபியைக் கடத்தி வைத்து பணத்தைக் கொண்டு வந்து தரச் சொல்கிறார்கள். அந்த காட்டு பங்களாவுக்குள் செல்லும் சந்தானமும் அவரின் நண்பர்களும் அங்குள்ள பேய்களிடம் மாட்டிக் கொள்கிறார்கள். ஒரு சூதாட்ட பந்தயத்தில் வெற்றி பெற்றால் மட்டுமே வெளியே போக முடியும் என பேய்க் குடும்பத்துத் தலைவன் பிரதீப் ராவத் சொல்ல, சந்தானம் என்ன செய்கிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் ஆரம்பத்திலேயே நகைச்சுவைக்கும் கலகலப்புக்கும் பஞ்சமிருக்காது என புரிய வைத்துவிடுகிறார்கள். அதனை உச்சக்காட்சி வரை திரைக்கதையில் காப்பாற்றியிருக்கிறார் இயக்குநர் பிரேம் ஆனந்த். பணத்தைக் கொள்ளையடிப்பதும் அது ஒருவர் மாறி மற்றொருவரிடம் சென்று பேய் பங்களா வரை போவதையும் லொஜிக்காகவே யோசித்திருக்கிறார்கள். அதன்பின் பேய்களின் ஆட்டம் என்பதால் லொஜிக் இல்லை, தனியே நகைச்சுவை மஜிக்தான்.

தோற்றத்திலும் நகைச்சுவையிலும் பழைய முறைமையில் நன்றாகவே மீளவந்துவிட்டார் சந்தானம். அவரிடமிருந்து ரசிகர்கள் எதிர்பார்ப்பது இதைத்தான் என்பதைப் புரிந்து கொண்டால் நல்லது. அப்படி நடந்து கொண்டால் டிடி ஆகவோ அல்லது பணமாகவோ அவருக்கு வந்து சேரும் என்பது உறுதி. நாயகன் என்றால் எப்படியும் கடைசியில் வெற்றி பெற்றுவிடுவார் என்று தெரிந்தாலும் பேய் பங்களாவில் அவர் ஆடும் அந்த 'கேம் ஷோ'தான் படத்தின் 'ஷோ ஸ்டாப்பர்'.

சந்தானத்துக்கு ஓர் இணை இருக்க வேண்டும் என்பதற்காக கதாநாயகியாக சுரபி. சந்தானம்தான் கதாநாயகன் என்றாலும் படத்தில் நடித்துள்ள ஒவ்வொருவருக்குமே முக்கியத்துவம் வரும்படி காட்சிகளை அமைத்திருக்கிறார்கள். சந்தானத்தின் நண்பர்களாக மாறன், சேது. இந்தப் படத்திலும் மாறனின் ரைமிங் வசனங்கள், ட்ரெண்டிங் வசனங்களாக அமைந்து ரசிக்க வைக்கிறது.

பிபின் தலைமையில் முனிஷ்காந்த் உள்ளிட்டவர்களின் கொள்ளை கூட்டம், மொட்டை ராஜேந்திரன் தலைமையில் தங்கதுரை உள்ளிட்டவர்களின் மற்றுமொரு கொள்ளை கூட்டம். வில்லன் பெப்ஸி விஜயனின் மகனான ரெடின் கிங்ஸ்லி, அடியாளாக தீனா. இவர்களும் ஆரம்பத்திலிருந்தே ஒருவரை ஒருவர் துரத்தித் துரத்தி, பேய் பங்களாவுக்குள் ஓடியோடி நம்மையும் சிரிக்க வைக்கிறார்கள்.

பேய் பங்களாவில் சூதாட்ட கேம் ஷோ நடத்தும் பிரதீப் ராவத், அவரின் குடும்பத்தைச் சேர்ந்த மசூம் சங்கர், மானஸ்வி ஆகியோரும் பேய்களாக மிரட்டியுள்ளார்கள்.

புதுச்சேரியின் தெருக்கள், அந்த பேய் பங்களா என ஒளிப்பதிவாளர் தீப் குமார் பதி கதாபாத்திரங்களுடன் ஓடியாடி ஒளிப்திவு செய்திருக்கிறார். ஆப்ரோ இசையில் பின்னணி இசை பக்கபலமாய் அமைந்துள்ளது.

பேய் பங்களாவின் வி. எவ். எக்ஸ் காட்சிகளை இன்னும் தரமாக அமைத்திருக்கலாம். இடைவேளைக்குப் பின் சில காட்சிகளின் நீளத்தைச் சிறிது குறைத்திருக்கலாம். மற்றபடி நேரம் கடந்து போவதே தெரியவில்லை.

# நட்சத்திரங்களின் கூட்டம்



ஜெய் பீம் பட இயக்குநர் தா. சே. ஞானவேல் இயக்கத்தில் ரஜினிகாந்த் தனது 170ஆவது படத்தில் நடிக்கிறார். லைகா நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு அநிருத் இசையமைக்கிறார். ஏற்கனவே, இது குறித்து அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

இந்தப் படத்தில் ரஜினிகாந்த் உடன் இணைந்து அமிதாப்பச்சன், நானி உள்ளிட்டோர் நடிப்பதாக தகவல் வெளியானது. இந்த நிலையில் தற்போது கிடைத்த தகவலின்படி, இந்த படத்தில் பிரபல மலையாள நடிகர் பஹத் பாசில் மற்றும் மலையாள நடிகை மஞ்சு வாரியர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளனர் என்று கூறப்படுகிறது. மேலும் சிலரை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறது. அந்த வகையில் - 'ஜெயிலர்' படம் போன்று ரஜினி 170 படமும் பல நட்சத்திரங்களின் படமாக உருவாகவுள்ளது.



# மீண்டும் பொன்ராமுடன்

வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன் ஆகிய வெற்றிப் படங்களை இயக்கியவர் பொன்ராம். கடைசியாக இவர் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்து வெளிவந்த ' டி. எஸ். பி' படம் பெரும் தோல்வியை சந்தித்தது. இந்த நிலையில் மீண்டும் பொன்ராம் இயக்கத்தில் விஜய் சேதுபதி ஒரு புதிய படத்தில் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. விஜய் சேதுபதியிடம் வெற்றிமாறன் ஒரு வரிக் கதை ஒன்று குறித்து பேசியுள்ளார். இந்த கதையை பொன்ராமிடம் கூறி ஒரு படமாக உருவாக்குமாறு விஜய் சேதுபதி கூறினார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# தனுஷ் படத்தில் அனிகா

தனுஷ் தன் 50ஆவது படத்தை சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் இயக்கி வருகிறார். இந்தப் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக துஷரா விஜயனும், சகோதரர்களாக எஸ். ஜே. சூர்யா, சந்தீப் கிஷன் ஆகியோர் நடிக்கின்றனர்.

வடசென்னையை மையமாகக் கொண்ட கேங்க்ஸ்டராக நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதற்காக, சென்னையின் பிரபல ஸ்ரூடியோவில் பிரமாண்ட செட் அமைக்கப்பட்டு படப்பிடிப்பு நடந்து வருகிறது.

இந்நிலையில், இப்படப்பிடிப்பில் நடிகை அனிகா சுரேந்திரன் கலந்துகொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. குழந்தை நட்சத்திரமாக என்னை அறிந்தால் திரைப்படத்தில் அனிகா நடித்திருந்தார். தற்போது, நாயகியாக சில படங்களில் நடித்து வருகிறார்.





# தெறிக்கும் தோற்றம்

மாளவிகா மோகனனின் பிறந்தநாளை முன்னிட்டு அவரின் 'தங்கலான்' பட தோற்றத்தை வெளியிட்டு படக்குழு வாழ்த்து தெரிவித்துள்ளது.

படத்தில் அவரின் கதாபாத்திரத்துக்கு ஆரத்தி என பெயரிடப்பட்டுள்ளது. கையில் கத்தி பொருந்திய வேல் கம்பை பிடித்தபடி மிரட்டலான பார்வையில் தோற்றமளிக்கிறார். குறிப்பாக, அவரின் உடைகள் படம் சுதந்திரத்துக்கு முந்தைய காலக்கட்ட கதை என்பதை உணர்த்துகிறது. பழங்குடியின மக்களை பிரதிபலிக்கும் வகையில் தீப்பொறிகள் தெறிக்கும் தோற்றம் பலரையும் கவர்ந்துள்ளது.

இயக்குநர் பா. ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படம் 'தங்கலான்'. இந்தப் படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஜி. வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரலில் புஷ்பா 2



அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில், சுனில் நடிப்பில் வெளியான படம் புஷ்பா. சுகுமார் இயக்கிய இந்த படம் செம்மர கடத்தலை மையமாகக் கொண்ட கதையில் உருவாகி இருந்தது. புஷ்பா தி ரைஸ் என்ற பெயரில் வெளியான இந்த படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்திருந்தார்.

அவரின் இசையில் உருவான சிறீ வள்ளி மற்றும் ஊ சொல்றியா மாமா போன்ற பாடல்கள் சுப்பர் ஹிட் ஆகின. இந்நிலையில் தற்போது இந்த படத்தின் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு அதே கூட்டணியில் நடைபெற்று வருகிறது. இந்த இரண்டாம் பாகத்துக்கு புஷ்பா தி ரூல் என்று பெயரிட்டுள்ள இயக்குநர் சுகுமார், தற்போது 40 சதவீதம் படப்பிடிப்பை முடித்து விட்டதாகவும் அடுத்த ஆண்டு ஏப்ரலில் இப்படத்தை திரைக்கு கொண்டு வர திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

# ஸ்ருவர்ட் பிரௌாட் ஓய்வு பெற்ற சகாப்தம்

இங்கிலாந்தின் மித வேகப் பந்து வீச்சாளரான ஸ்ருவர்ட் பிரொட் நடப்பு ஆஷஷ் தொடரோடு கிரிக்கெட் டிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஸ்ருவர்ட் பிராடின் கதை கொஞ்சம் வித்தியாசமானது. குறித்த காலத்தைவிட, மூன்று மாதங்களுக்கு முன்பாகவே குறைப் பிரசவத்தில் மிகச்சிறிய உருவத்தோடு பிறந்த இவர், சிறுவயதிலேயே நுரையீரல் வளர்ச்சியின்மை, முட்டு வருத்தம் என பல்வேறு வியாதிகளால் அவதிப்பட்டார். எனினும், கிரிக்கெட் மீது தான் கொண்ட காதலின் காரணத்தால் அவர் மூலையில் முடங்காமல் தன்னுடைய கனவான கிரிக்கெட்டை நோக்கி ஓடினார். கிரிக்கெட் மீது அவர் கொண்ட ஆர்வத்தின் முன்பு குறைபாடுகள் எவற்றாலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அவை ஏற்படுத்திய எந்தத் தடையையும் அவர் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

**2006**இல் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அறிமுகமானாலும் அவர் ஒருநாள் மற்றும் இருபது -20 போட்டிகளைவிட டெஸ்ட் போட்டிகளின் மீதுதான் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அதனால்தான் ஒரு கட்டத்தில் தனது டெஸ்ட் வாழ்வை நீட்டித்துக் கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் ஆடுவதையே தவிர்த்துக் கொண்டார். இத்தனைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளிலுமே அவர் ஓரளவுக்கு நன்றாகத்தான் ஆடியிருந்தார். பந்துவீச்சில் மட்டுமில்லை. துடுப்பாட்டத்திலும் சில போட்டிகளில் அசத்தியிருந்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளைப் பொறுத்தவரை அவருக்கான அடையாளமாக இருந்தது 2007 உலகக் கிண்ணத்தில் இந்திய அணியின் யுவராஜ் சிங் அடித்த 6 சிக்ஸர்கள்தான். பிரொட் அதன்பிறகு எவ்வளவோ நல்ல ஆட்டங்களை ஆடியிருந்த போதும் துடைக்க முடியாத கறையாக அந்த 6 சிக்ஸர் என்ற அடையாளம் அவர்மீது ஒட்டிக் கொண்டிருந்தது.

அந்த சம்பவத்துக்குப் பிறகு பிரொட்டுக்கு யுவராஜ் சொன்ன செய்தியையும் இங்கே கொஞ்சம் பார்க்க வேண்டும். “கவலைப்படாதீர்கள். இந்த மனநிலை எப்படியிருக்கும் என எனக்குப் புரிகிறது. நீங்கள் இங்கிலாந்தின் எதிர்காலமாக மாறி பெரிய சாதனைகளைச் செய்யப் போகிறீர்கள் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.’ என்றார். தோல்விகள் கண்டு நாம் ஒடுங்கிவிடக்கூடாது என்பதற்கு மிகச் சரியான உதாரணம் ஸ்ருவர்ட் பிரொட் தான்.

யுவராஜிடம் அறிவுரை பெற்ற அதே அண்டில்தான் பிரொட் டெஸ்ட் போட்டிகளிலும் அறிமுகமானார். டெஸ்ட் போட்டிகளில் தனக்கென தனியான பெருமித அடையாளங்களை பிரொட் கட்டியெழுப்பிக் கொண்டார். **2007**இல் இலங்கைக்கு எதிரான ஒரு போட்டியில் தான் பிரொட் தனது டெஸ்ட் வாழ்வை ஆரம்பித்திருந்தார். **2023** ஆஷஷோடு விடைபெற்றார். எனில், **16** அண்டுகள் டெஸ்ட் கிரிக்கெட் மட்டுமே ஆடியிருக்கிறார். இதெல்லாம் அசாத்தியமானது. உலகளவிலேயே ஒரு சில வேகஃமித வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டும்தான் இந்த சாதனையைச் செய்திருப்பார்கள்.



இமயமலையை முதுகில் சுமப்பது போன்ற வலிதான் ஒரு வேகப்பந்து வீச்சாளர் இத்தனை அண்டுகள் பந்துவீசுவது. அதை வெற்றிகரமாக செய்திருப்பதே பிரொடின் மிகப்பெரிய அடையாளம்தான்.
ஆனால், அதைக்கடந்தும் இந்த 16 ஆண்டுகளில் பிரொட் பல சாதனைகளை செய்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளில் 600 விக்கெட்களை வீழ்த்திய ஐந்தாவது பந்து வீச்சாளர் ஸ்ருவர்ட் பிரொட்தான். இந்த ஐந்து பந்து வீச்சாளர்களில் முத்தையா முரளிதரன், ஷேன் வோர்ண், அனில் கும்ப்ளே ஆகியோர் சுழல் பந்து வீச்சாளர்கள்தான். ஆக, 600 விக்கெட்களுக்கு மேல் வீழ்த்திய இரண்டாவது வேகப்பந்து வீச்சாளர் பிரொட்தான்.

எனில், முதல் இடத்தில் இருப்பவர் யார்? சந்தேகமேயின்றி பிரொட்டின் சக வீரர் அண்டர்சன்தான். அவர் 690 விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். பிரொட் 602 விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். பிரொட்டின் கிரிக்கெட் வாழ்வு பற்றிப் பேசுகையில், அண்டர்சனுடனான அவருடனான நட்பையும் கூட்டணியையும் பற்றி பேசாமல் நகரவே முடியாது.

ஓய்வை அறிவித்த பிறகு ஆஷஷில் பிரொட் கடைசியாக துடுப்பெடுத்தாட களமிறங்கும் போதே அண்டர்சனுடன் தான் வந்திருந்தார். தற்காப்பு கவசங்கள் அத்தனையையும் அணிந்து கொண்டு அரங்கிலிருந்து இருந்து இருவரும் இறங்கி வந்தபோது நீண்ட காலமாக வெற்றிகரமாக பல மிஷன்களை முடித்துக்கொடுத்த போர் வீரர்களை போன்றுதான் தோன்றியது.

எந்த ஒரு குழு விளையாட்டாக இருந்தாலும் அதற்குக் கூட்டு முயற்சி மற்றும் பொறாமை அற்ற நட்பு இருத்தல் வேண்டும். இதற்கு மிகச்சிறந்த உதாரணம்தான் அண்டர்சன் மற்றும் பிரொட். அவுஸ்திரேலிய அணியின் கிளென் மெக்ராத் மற்றும் ஷேன் வோர்ண் இருவரும் கூட்டாக டெஸ்ட் கிரிக்கெட்டில் 1001 விக்கெட்களை வீழ்த்தியிருக்கின்றனர். இவர்களின் சாதனையை பிரொட் மற்றும் அண்டர்சன் கூட்டாக முறியடித்தனர். தங்களுடைய நட்பைப் பற்றி அண்டர்சன் கூறுகையில்

“நாங்கள் இருவரும் வெகு நாட்களாக ஒன்றாக ஆடிக்கொண்டிருக்கிறோம். இது எங்களின் கூட்டு உழைப்பை வெளிப்படுத்துகிறது. அறிந்தோ, அறியாமலோ நாங்கள் எங்களின் தரத்தை உயர்த்துவதற்காக ஒருவருக்கொருவர் போட்டி போட்டு எங்களை முன்னுக்குத் தள்ளிக்கொண்டே இருக்கிறோம். இதை நாங்கள் மகிழ்ச்சியாகச் செய்துகொண்டிருக்கிறோம்.”

ஆனால், இந்த நட்பிலுமே பிரொட் சில விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அண்டர்சன் பிரொட்டைவிட மூத்த வீரர். பிரொட்டுக்கு முன்பாகவே இங்கிலாந்தின் பந்துவீச்சுப் படையை முன் நின்று வழிநடத்தும் தலைமையிடத்துக்கு நகர்ந்திருந்தார் அண்டர்சன். இதனாலயே “அண்டர்சனின் நிழல்” (**Shadow of Anderson**) என பிரொட்டை அழைக்க ஆரம்பித்தனர். அண்டர்சனின் நிழலாக அவரின் பாதச்சுவடுகள் பதிந்திருக்கும் தடத்தின் வழியாக தனது ஓட்டத்தை தொடர்பவராகத்தான் பிரொட் பார்க்கப்பட்டார். ஆனால், அதில் முற்றிலும் உண்மை இல்லை. ஆஷஷையே எடுத்துக் கொள்வோமே. அது இங்கிலாந்து வீரர்கள் உயிரைக் கொடுத்து ஆடும் உக்கிரமான களம்.

இங்கே அண்டர்சனை விட பிரொட் தான் அதிக விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். அண்மையில் முடிந்த ஆஷஷ் தொடரில்தான் ஆஷஷில் மட்டும் 150 விக்கெட்களை வீழ்த்திய முதல் இங்கிலாந்து வீரர் எனும் சாதனையை பிரொட் செய்திருந்தார். ஒட்டுமொத்தமாக ஆஷஷ் வரலாற்றில் மெக்ராத் மற்றும் வோர்ணுக்கு பிறகு அதிக விக்கெட்களை வீழ்த்தியிருப்பவர் பிரொட்தான்.

நிழலாக மட்டுமே வாழ்ந்தவர் இப்படியான சாதனைகளை செய்ய முடியுமா?

பிரொட்டின் வெற்றிக்கு மிக முக்கிய காரணம் எப்போதும் அயர்ந்திடாத விட்டுக்கொடுக்க தயாராக இல்லாத அவரது குணாதிசயம்தான். 2020இல் மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருந்தது. அந்தத் தொடரின் முதல் போட்டியில் பிரொட்டை ஆடும் பதினொருவரில் எடுக்காமல் இருக்கையில் உட்கார வைத்துவிடுவார்கள். தொடர்ச்சியாக 51 போட்டிகளை எந்த இடைவெளியும் இல்லாமல் சொந்த மைதானங்களில் ஆடியவருக்கு இது பேரதிர்ச்சியாக அமைந்தது.

“கடந்த இரண்டு வருடங்களில் நான் என்னுடைய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனாலும் இப்போது இப்படி ஒரு முடிவு. இது எனக்கு பெருங்கோபத்தையும் குழப்பத்தையும் கொடுத்திருக்கிறது.” என அந்த டெஸ்ட் போட்டி நடந்து கொண்டிருந்த போதே தனது அதிருப்தியை மொத்தமாக கொட்டித் தீர்த்திருந்தார் பிரொட். பிரொட் இல்லாத அந்தப் போட்டியில் இங்கிலாந்து தோற்றும் போனது. அடுத்த இரண்டு போட்டிகளில் பிரொட்டுக்கு ஆடும் பதினொருவர் அணியில் இடம் கிடைத்தது.

காத்திருந்த வேங்கையாக வேட்டைக்குத் தயாரான பிரொட் அந்த இரண்டு போட்டிகளில் மட்டும் 16 விக்கெட்களை வீழ்த்திக் காட்டினார். அந்த இரண்டு போட்டிகளையும் இங்கிலாந்தும் வென்றது. இதுதான் பிரொட். இதுதான் அவரின் உத்வேகம்.

இப்போது சொல்லுங்கள் அந்த 6 சிக்ஸர்கள் வழங்கிய நிகழ்வை மட்டுமே அவரின் அடையாளமாக எடுத்துக் கொள்ள முடியுமா? அது நாணயத்தின் ஒரு பக்கம்தான். அவர் வீழ்ந்த கதை மட்டும்தான் அது. விழுந்த இடத்திலிருந்து எழுந்து உச்சத்தை நோக்கி பீறிட்டு பாய்ந்து அவர் சாதித்தவை ஏராளம். அந்த சாதனைகள்தான் அவரின் அடையாளமாக இருக்க வேண்டும். அவரை ஒரு நிழலாக அல்ல இங்கிலாந்து கிரிக்கெட்டின் பிரதான வெளிச்சமாக மட்டுமே நினைவு கூர வேண்டும்!

# விமல் எனும் வித்தகர்!

- மாலி

எழுபதுகளின் தொடக்கத்தில் ஒருநாள், கொழும்பு சென்றிருந்தபோது இலங்கை வானொலியில் அப்போது செய்தி வாசிப்பாளராகவும், வேறுசில நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவுமிருந்த வீ. சுந்தரலிங்கத்தை (தாடி) சந்திப்பதற்காக வானொலி நிலைய வரவேற்பு கூடத்தில் அறிவித்துவிட்டு காத்திருக்கையில், “சுந்தரலிங்கம் ‘எயரில்’ இருக்கிறார், சற்று தாமதமாகும்” என்று என்னிடம் அங்குவந்து கூறி, தன்னை அறிமுகம் செய்துகொண்டவர் விமல் சொக்கநாதன்.

‘அவர் ‘எயரில்’ இருக்கிறார்’ என்ற இந்த தகவலை வரவேற்பு கூடத்தில், அவர்கள் மூலமாகவே எனக்கு தெரிவித்திருக்கமுடியும். ஆனால் அவ்வாறன்றி, தனது சகா ஒருவரைக் காண வந்தவரிடம் விமல் காண்பித்த அந்த இங்கிதம் பெரிது. அது, என்னில் பதிந்தது.

82இல் இங்கிலாந்து வந்தபோது, இலங்கை வானொயின் மற்றைய வீ. சுந்தரலிங்கம் (அப்போலோ), பிபிசி தமிழோசைக்கு பொறுப்பாகவிருந்தார். பிபிசி சங்கர் (சங்கரமூர்த்தி) அப்போது மருத்துவ விடுமுறையில் சென்றிருந்தார்.

பிபிசி தமிழோசையின் தினசரி செய்தி வாசிப்பில் சுந்தா என்னையும் இணைத்துக்கொண்டார். ஆங்கிலத்தில் அவர் தேர்ந்துதரும் பிபிசி செய்தியாளர்களின் செய்தி அறிக்கைகளை தமிழில் நாமே மொழிபெயர்த்து, நாமே அதனை ஒலிபரப்பில் வாசிப்போம். ஆனந்தி சூரியப்பிரகாசன், விமல் சொக்கநாதன் ஆகியோருடன் இன்னும் ஓரிருவர் கலந்துகொள்வார்கள்.

அரைமணிநேர ஒலிபரப்புத்தான். செய்திகள் பதினைந்து நிமிடங்கள்வரை இடம்பெறும். எனின், தரப்படும் செய்தி அறிக்கையை அது சொல்லும் விதத்தில், அது சொல்வதை, பிறழ்வின்றி அளவான ஒரு நேரத்துள் சாரப்படுத்தியும் வெளிக்கொணரும் ஒரு வித்தைதான் அது. பொதுவாக ஒருமணி நேரத்துக்கு முன்னதாக இது தொடங்கும்.

விமல் இந்த வித்தையில் ஒரு தீரர். தெளிவாக புரிந்து, தெளிவாக - அழகாக வெளிப்படுத்துவார். சொற் பிரயோகங்களில் ஒரு கண்ணியம். அவர் வாசிக்கும் எழுத்துப் பிரதியின் இத் தன்மைகள், அவரின் குரலில், அவரின் வாசிப்பிலும் துலங்கும். இலக்கணமான ஒருவர் - ஒரு சாமர்த்தியசாலி.

நத்தார் பண்டிகை காலங்களில் ‘தமிழோசை’யில்



சங்கர் தயாரித்தளிக்கும் சேக்ஸ்பியரின் குறு நாடகங்கள் அக்காலங்களில் பேசப்படுபவை. விமலும் அப்பேசுபொருளுக்கு உரித்தானவர். ஒரு முறை நானும் பங்குபற்றியிருந்தேன்.

‘லண்டன் முரசு’ மாத சஞ்சிகையாக லண்டனிலிருந்து வெளிவந்தது. லண்டனிலிருந்து முதல் தமிழ் பத்திரிகையாக ‘தமிழன்’ பத்திரிகையை நண்பர்கள் இராஜகோபால், குகநாதன் ஆகியோருடன், நானும் இணைந்து தொடங்கினோம். முதற்பிரதி அச்சாகி வெளிவந்ததும் கொழும்பில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு தீர்வு தொடங்கிவிட்டது என்ற எண்ணத்தில், பத்திரிகையை தொடர்ந்து வெளியிடும் எண்ணம் கைவிடப்பட்டது. ஆனால், பின்னரும் தொடர்ந்த பிரச்னையில், இராஜகோபாலும் நானும் அதனை மீளத் தொடங்கினோம். ‘நாங்கள் தமிழர்கள்தானே’, ஒரு சில மாதங்களில் ‘தமிழன்’ பத்திரிகையிலிருந்து விலக நேர்ந்தது.

லண்டனிலிருந்து ‘தமிழோசை’ என்றொரு பத்திரிகையையும் வெளிக்கொணரவேண்டும் என்ற ஓர் ஆசையில், தனியார் வர்த்தகர் ஒருவர் அணுகி, வற்புறுத்தலுடன் சமாதானப்படுத்தியபோது, பிபிசி தமிழோசையின் பிதாமகர் சோ. சிவபாதசுந்தரமும் லண்டனில் இருந்தார். அவரும் விரும்பியதில், ‘தமிழோசை’ பத்திரிகை தொடங்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ‘ஈழகேசரி’ பெற்றதான ஒரு மதிப்பை “தமிழோசை” பெற்றது. அப்போது, ஒலிபரப்பாளரான விமல் சொக்கநாதனை ஒரு பத்திரிகையாளனாக ‘தமிழோசை’ முதன்முதலாக அறிமுகப்படுத்தியது. உலக விவகாரங்களை விமல் வாராவாரம் எழுதினார்.

லண்டனிலிருந்து ‘நாழிகை’ சஞ்சிகை வெளிவந்தபோது, ‘தமிழில் ஒரு ரைம்’ என்று ‘தினமணி’ குறிப்பிட்டது. விமல் சொக்கநாதன் ‘நாழிகை’யின் துணை ஆசிரிய குழுவில் ஒருவராகவிருந்தார்.

ஆக, காத்திரமான விவகாரங்களை வாசகனுக்கு தெளிவாகவும், எளிதாகவும், ஆவலாகவும் அளிக்கும் சொல் ஆளுமையும், நடையும், அந்த ஆற்றலும் விமலுடையவை.

விமல் பின்னர் பரவலாக பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதினார். தன்னுடைய எழுத்தில் ஒரு ஜனரஞ்சக கவர்ச்சியை காண்பிப்பதிலும் முனைந்தார்.

பின்னர், ‘நாழிகை’யில் விமல் எழுதவில்லை.

ஜனரஞ்சகம் நல்லது. அது எல்லோருக்கும் வாகானதல்ல. ஆனால், அதில் அந்த ‘ஜிகினா’ வேலைப்பாடுகள் விமலுக்கு அவசியம்தானா என்ற ஆதங்கம், விமலின் எழுத்தாற்றலைத் தெரிந்தவர்களுக்கு இயல்பில் விசனமாகியது.

விமல் நல்ல நிகழ்ச்சி தொகுப்பாளர், குறிப்பாக, பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் அமைவாக அப் பணியை ஆற்றுவார். பேர்ளினில் பரதநாட்டிய அரங்கேற்றம் ஒன்றுக்கு அவருடன் ஒருமுறை சென்றமை, அவர்பற்றித் தெரியாத இன்னொன்றைத் தெரிந்துகொள்ள வைத்தது. பிரசாந்தி சேகரின் பரதநாட்டிய அரங்கேற்றம். அண்மையில் காலமான நாட்டிய மேதை லக்ஷ்மி விஸ்வநாதன் பிரதம விருந்தினர். விமல் அறிவிப்பாளர். லண்டனின் ஜனநாயகம் புல்லாங்குழல். கௌரவ விருந்தினராக என்னையும் அழைத்திருந்தார்கள்.

லண்டனிலிருந்து சென்ற நாங்கள் மூவரும் ஒன்றாக தங்கியிருந்தோம். நடன ஒத்திகை முடிந்து போய், சாப்பாட்டை முடித்துக்கொண்டு, சற்று ஆரம்பித்த பேச்சுத்தான். விடிந்தது தெரியவில்லை. ஒரு மெக்கா நகைச்சுவைப் படம் ஓடி முடிந்தது!

விமலா, ஜனநாயகமா? யாருக்கு யார் சளைத்தவர்! (விமல் ஒரு வழக்கறிஞர். ஜனநாயகம், கணித ஆசான்.)

ஆக, வாழ்வில் நெருக்கமாக பயணித்தவர் விமல். பிபிசி காலத்தில், வீடொன்று வாங்கும்படி ஆனந்தி அடிக்கடி சொல்வார். வாங்கிய வீட்டின் சட்ட அலுவல்களைக் கவனித்தவர்கள் விமலும் மனைவி பத்மாவும்.

செய்தித் துறை அவர் வாழ்வாகியபோது, செய்தியாகி அவர் வாழ்வு முடிந்தது.

---




**செல்வா. கேசவன், சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போது அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளையும் யோசனைகளையும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அனைத்து கட்சி தலைவர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளாரே. ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனைகள் எண்டால் என்ன என்று உங்களுக்காவது தெரியுமா?

**வியுக்தியார்:** இந்த பதின்மூன்றைப்பற்றி தினமும் வருகின்ற செய்திகளைப் படித்தால் தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டும்போல இருக்கின்றது. அன்றைய கூட்டம் முடிவில் அப்படி எந்த விசயமும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரியவில்லையே. அது சரி கூட்டம் நடந்தபோது ஜனாதிபதி செயலகக்காரர்கள் யாரும் குறிப்பெடுத்துக்கொள்ளவில்லைப்போலும், அதுதான் அங்கு ஒவ்வொருவரும் முன்வைத்த யோசனைகளை இப்போது எழுத்தில் தரச்சொல்லியிருக்கிறார் ஜனாதிபதியின் செயலாளர் என்றுதான் நினைக்கின்றேன்.

---

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** சமஷ்டியை கோருகின்ற தமிழ்த்தரப்புகள் அதனை எவ்வாறு அடையப் போகிறோம் என்பதற்கான வழிகளை வெளிப் படுத்தவில்லை என்று கூறியுள்ள சிவி விக்கினேஸ்வரன் எம்.பி., தானும் வழியை சொல்லவில்லை என்றும், ஆனாலும், அனைத்து தமிழ்க்கட்சிகளும் சமஷ்டியைத் தான் கோருகின்றன என்றும் சொல்லியிருக்கிறாரே. தானும் சொல்லவில்லை என்பவர் எதற்காக மற்றவர்களை குறை கூறுகின்றார்.?

**வியுக்தியார்:** அவர் என்ன வழி தெரிந்துகொண்டா சொல்லாமல் இருக்கிறார்? அவருக்கு தெரியாது என்பது போல மற்றவர்களுக்கும் தெரியாதுதான் என்கிறார். எனக்கும் கோடீஸ்வரன் ஆகவேண்டும் என்று ஆசைதான், ஆனால் கோடீஸ்வரன் ஆவது எப்படி என்பதுதான் தெரியவில்லை. அதற்காக நான் ஆசைப்படுவதை நிறுத்த முடியுமா?

---

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை நோக்கி, ஆளும் தரப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தகாத வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தியமையால் அங்கு சர்ச்சை ஏற்பட்டது பற்றி என்ன நினைக் கிறீர்கள். மக்கள் பிரதிநிதிகளே இப்படி நடந்துகொள்ளலாமா?

**வியுக்தியார்:** பிள்ளையான் என்ற சந்திரகாந்தன், சாணக்கிய எம்.பி.யை நோக்கி போடா என்று பேசிய காணொளி ஒன்றை நானும் பார்த்தேன். அவர்கள் இருவரும் ஏறக்குறைய ஒரே வயதினர் என்று நினைக்கின்றேன். அதைவிட இருவரும் ஒருகாலத்தில் ஒன்றாக அரசியல் செய்தவர்கள். பிள்ளையானை தலைவராக ஏற்றுக்கொண்டு அரசியல் செய்ய தொடங்கியவர்தான் சாணக்கிய. அவர்கள் இருவரும் போடா வாடா என்று கதைப்பதை பெரிதுபடுத்துவது அழகல்ல என்று நினைக்கின்றேன்.

---

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** யாழ்.பல்கலைக்கழகத்தில், கடந்த போயா தினத்தை முன்னிட்டு பௌத்த கொடிகள் கட்டி, புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன என்றும், வழமைக்கு மாறாக அதிகளவான பௌத்த கொடிகள் பல்கலைக்கழக வளாகத்தினுள் கட்டப்பட்டிருந்தன என்றும் செய்திகள் வெளிவந்திருந்தனவே. அது என்ன வழக்கத்திற்கு மாறாக நடக்கிறது?

**வியுக்தியார்:** யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதனே அண்மையில் தெரிவித்திருந்தாரே கவனிக்கவில்லையா? யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்தைத் தவிர மற்றைய அனைத்துப் பீடங்களிலும் பெரும்பான்மையின மாணவர்களே பெரும்பான்மையாக கல்வி கற்கின்றனராம். இதுதான் நிலைமை என்றால் அவர்கள் போயா தினத்தில் புத்தரை வழிபடுவது எதற்காக செய்தி ஆகிறது என்பதுதான் தெரியவில்லை. தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் அங்கு தத்தமது வழிபாடுகளை நடாத்துவதற்கு எந்த தடையும் இருப்பதாக இதுவரை எந்த செய்தியும் வந்ததில்லையே. பேராதனை பல்கலைக்கழகத்தில் மிகப்பெரிய இந்து ஆலயமே இருக்கின்றது. நாம் இங்கு அவர்களின் பழிபாட்டு உரிமையை தடுத்தால், அவர்கள் அங்கும் தடுக்க முயல்வதை குறைசொல்ல முடியாமல் போய்விடும்.

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தால் இந்த நாட்டில் மீண்டும் இரத் தக்களரி ஓடும் என்று கூறி வைக்க விரும்புகின்றோம் என்று உதய கம்பன்பில எச்சரித்திருக்கிறாரே கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** சம்பந்தன் ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று கஜேந்திரகுமார் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறார். சம்பந்தன் சமஷ்டி கேட்டு விடாப்பிடியாக இருக்கிறார் என்று உதய கம்பன்பில கூறுகிறார். பாவம் சம்பந்தன் இரண்டு பக்கமும் மேளம் போல அடிவாங்கிக்கொண்டிருக்கிறார். இந்த வயசிலும் மனுசனுக்கு அடி விழுந்து கொண்டிருக்கின்றது.

---

**அ. சிவகணேஸ், மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** கறுப்பு ஜூலை 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சியில் முன்னெடுக்கப்பட்டது என்ற ஒரு செய்தி படத்துடன் ஈழநாடுவில் வெளிவந்திருந்தது. ஆனால் படத்தில் இரண்டுபேர் மாத்திரம் நின்று அஞ்சலி செய்துகொண்டிருந்தனர். 40வது ஆண்டு நினைவை 40 பேருடன்கூட நினைவுகூர முடியாத நிலையிலேயா நாம் இருக்கின்றோம்?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. அவர்கள் என்ன வைத்துக்கொண்டா வஞ்சகம்செய்கிறார்கள். இப்போதெல்லாம் இரண்டு பேர் மாத்திரமே அரசியல் கட்சியைக் கூட நடத்துகின்றார்கள். ஒருவர் மாத்திரமே கடிதம் எழுதிவிட்டு, சிவில் சமூகம் என்ற பெயரில் வெளியிடுகிறார். நீங்கள் இதையெல்லாம் கண்டுகொள்ளக்கூடாது.



# பேரப்பிள்ளை

மனோ சின்னத்துரை

சந்திரகுமாருக்கு பேரப்பிள்ளையைத் தூக்கி கொஞ்சிவிளையாட ஆசையாக இருந்தது. ஆனாலும் அவரை வெட்கம் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது. மனைவி, பிள்ளைகள் அருகில் இல்லாத நேரம் ஓடிப்போய் தொட்டிலுக்குள் கிடந்த குழந்தையை எட்டிப் பார்தார். குழந்தை கைகளை ஆட்டி இவரை அழைத்தது. தாத்தாவைப் பார்த்துச் சிரித்தது. சந்திரகுமார் குழந்தையைத் தொட்டுப்பார்க்க குனிந்தார். மனைவியின் ஆள்அரவச் சத்தக்கேட்டது. திடுக்குற்று முகட்டைப் பார்த்தபடி தன்னைச் சுதாகரிக்க முயன்றார்.

‘என்னப்பா ஆசை யெண்டா ஒருக்கால் தூக்குங்குங்கோவன்’

‘இல்லையப்பா, இஞ்ச மேற்சுவரில வெடிப்பு வாறமாதிரிக்கிடக்கு. வடிவாய்ப்பாரும்’

சந்திரகுமாரின் மனைவிக்குச் சிரிப்பு வந்தது. அடக்கியபடி குசினிக்குள் நுழைந்தார்..

சந்திரகுமார் ஒரு வெட்கம் பிடித்த பேர்வழி. பாசத்தை வெளிக்காட்டத் தெரியாது. உள்ளுக்குள் அடக்கிவைத்துத் தவிப்பவர். பாடசாலையில் பிள்ளைகளைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வரும்போதும்கூட எல்லாப்பெற்றோரும் தமது பிள்ளைகளைக் கட்டிஅணைத்து கன்னத்தில் இறுக்கமாக ஒரு முத்தம் கொடுத்து உள்ளே அனுப்புவர். இவருடைய பிள்ளைகளும் இவரைப் பார்த்தபடி அண்ணார்ந்து நிற்கும், இவரோ எங்கேயோ வெறித்தபடி நின்று விட்டு வருவார். உடனடியாக வீட்டுக்கும் வர மாட்டார். பிள்ளைகள் உள்ளே நுழையும்வரை பிள்ளைகளையே பார்த்தபடி நின்றுகொண்டிருப்பார். சிலவேளைகளில் அவரது மனசு விசும்பும்.

ஆட்களுக்கு முன்னால், மனைவியில் முட்டக்கூட அவருக்கு வெட்கம். எங்காவது சேர்ந்துபோகும் சந்தர்ப்பங்களில் ஒரு மீற்றர் இடைவெளியை எப்போதும் கடைப்பிடித்துவந்தார். மனைவிக்கும் குழந்தைகளுக்கும்கூட இதெல்லாம் பழகிவிட்டது. பிள்ளைகள் வளரவளர சந்திரகுமாருக்கும் பொறுப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. எதைச்செய்தாலும் தீர ஆராய்ந்து மனைவி, பிள்ளைகளிற்கு பாதகம் வராதபடி பார்த்துக் கொண்டார். உள்ளுக்குள் இளகிய மனசு. அதை வெளிக்காட்ட அவருக்குத் தயக்கமாக இருந்தது. அதனாலோ என்னவோ அவர் தன்னை ஓர் இறுக்கமான பேர்வழியாக வெளிக்காட்ட விரும்பினார். பொது வேலைகளில் நாட்டமிருந்தாலும், மற்றவர்களுடன் பிரச்சினைப்பட விரும்பாதகாரணத்தால் ஒதுங்கியே வாழ்ந்தார்.

இவருக்கு நாற்பது வயதை அண்மித்த போது இவருடைய நண்பர் ஒருவர் விபத்தொன்றில் இறந்துபோனார். நண்பருடைய மனைவி பிள்ளைகளின் தாழாத துயரைப்பார்த்து சந்திரகுமார் துவண்டு போனார்.

‘அவன்பாவி போட்டான். இருக்கிறதுகள் எவ்வளவு துடிக்குதுகள்’

சந்திரகுமார் மனதுக்குள் கற்பனைகள் ஓடின. மயானமண்பத்தில் தான் நீட்டி நிமிர்ந்து கிடப்பதையும், தனது மனைவி பிள்ளைகள் விம்மி வெடித்துக்கொண்டு நிற்பதையும் கண்டார். அவரால் அடக்க முடியவில்லை. பக்கத்தில் நிற்பவர்களையும் மறந்து விம்மி வெடித்தார். சிறிது நேரத்தில் தன்னைச் சுதாகரிக்கமுடிந்தாலும், அப்போதும் அவருக்கு வெட்கம் வந்து துருத்திக்கொண்டுதான் நின்றது. அருகிலிருந்தவரை சிரித்துச் சமாளித்துப் பக்குவமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அன்றிலிருந்து தனக்குள் ஒரு வைராக்கியத்தை வரவழைத்துக்கொண்டார். தன் பாசம் பிள்ளைகளுக்குத் தெரியக்கூடாது. தற்செயலாக தான் இறந்தால் தன் மனைவி பிள்ளைகள் கவலைப்படக்கூடாது. அழக்கூடாது. இதற்கு என்ன வழியென்று யோசித்தார்

சந்திரகுமாருக்கு ஒரு வழி பிறந்தது. ஒரு வகையில் அது முட்டாள்த்தனமாகத் தெரிந்தாலும் அவருடைய அறிவு அதைச் சரியென்று அப்படித்தான் சொல்லியது. மனைவி பிள்ளைகள் தன்னில் பாசம் கொள்ளக்கூடாது. தன்னை வெறுக்கவேண்டும் என்று முடிவெடுத்தார். அதற்காக அவர் படாத பாடுபட்டார். சில்லறை விசயங்களைப் பெரிதாக்கிப் பார்த்தார். சத்தம் போட்டுப் பார்த்தார். இந்தப்போராட்டம் அவரை ஒரு நோயாளி போலவும் ஆக்கியது. ஆரம்பத்தில் இவ்விதம் செயற்கையாக நடந்து கொள்ள முற்பட்ட சந்திரகுமார் காலப்போக்கில் கிட்டத்தட்ட அவ்வாறான ஒரு மனிதராகவே ஆகிவிட்டார். அவரது புறச்சூழலும் அவரை அவ்வாறான ஒரு நிலைக்குத் தள்ளிவிட்டது.

காலங்கள் கடந்தன. வாழ்க்கையில் எதுதான் நிரந்தரம்? துன்பங்கள் துயரங்கள் கூட நிரந்தரமற்றவைதானே!. சந்திரகுமாரின் மனைவி சாமர்த்தியசாலி. பொறுமைசாலி. சந்திரகுமாரை நேராக்கிவிட்டார். ஆனால் வெட்கம்தான் அவருக்குத் தொடர்கதையாகிக் கொண்டிருந்தது.

அவருடைய ஒரே மகள் காதல் வசப்பட்டாள். மகிழ்ச்சியாக கட்டிவைத்தார். குழந்தையும் பிறந்தது.

ஆனால், சந்திரகுமாரால் குழந்தைக்கு கிட்டப்போக முடியவில்லை. சந்திரகுமாரின் மனைவிக்கு பேரப்பிள்ளையுடன் ஒரே கொண்டாட்டம். பேரப்பிள்ளையைச் சாட்டாக வைத்துச் சந்திரகுமாருடனும் அவர் விளையாடிக் கொண்டிருந்தார். இந்த விளையாட்டு சந்திரகுமாருக்கும் பிடித்திருந்தது. மனைவியின் சேட்டைகளை உள்ளூர ரசித்தார். பென்சன் எடுத்துவிட்டு வீட்டில் இருப்பவருக்கு பேரப்பிள்ளையின் வரவு பெரும் வரமாகவே கிடைத்தது. அவசரத்துக்குக்கூட பிள்ளையைக் கைமாற மாட்டார். இந்த இடத்தில் மனைவி உண்மையாகவே கோபத்தைக் கொட்டினார்.

பிள்ளை தொட்டிலில் கிடந்து கைகால்களை அசைத்து விளையாடியது. பின் உடம்பு பிரட்டியது.

பின் தவழ்ந்தது. பிள்ளை எழுந்து நடந்தது. பிள்ளை வாயில் வந்த ஒலிகளை எல்லாம் எழுப்பியது. அடிக்கடி அந்த ஒலிகள் தாத்தாவாக எதிரொலித்தன. தாத்தாவோ என்னவோ சந்திரகுமாருக்கு தாத்தாவாகவே கேட்டது. மனைவி அந்த ஒலிகளை தாத்தாவாகவே ஆக்கினார். நாட்கள் நகர்ந்தன. நகரத்தானே வேண்டும்.

ஒரு இரவுநேரம், செற்றியில் சாய்ந்திருந்து ரிவி பாரத்துக்கொண்டிருந்தபோது, தாத்தா என்றபடி பேத்தி கிட்ட வந்து தாத்தாவைத் தொட்டாள். தாத்தாவைப் பார்த்துச்சிரித்தாள். திரும்பவும் தாத்தா என்றாள்.

தாத்தா சொக்கிப்போனார். யாரையும் அவர் பார்க்கவில்லை. யாரும் அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. அப்படியே வாரி அணைத்து மடியில் தூக்கி இருந்தினார். பேத்தி தாத்தாவின் விரல்களைக்கோதி விளையாடினாள். தாத்தா தன்நிலை மறந்து வானத்தில் பறந்தார்.

இரவு தாத்தாவுக்கு நித்திரை வரவில்லை. ஒரு புதிய உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினார். கடந்த காலத்தில் தான் விட்ட தவறுகள் அல்லது தனது இயலாமையை எண்ணி வருந்தினார். காலம் கடந்தது கடந்தது தான். போனது போனது தான். இருக்கும் காலத்தை சரியாக வாழ்ந்திடவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டார். தன் பிள்ளைகளிடம் வெளிப்படுத்தத் தவறிய அன்பை, பாசத்தை பேத்தியில் காட்ட அவர் மனம் முடிவு செய்தது. பிள்ளை வளர்ப்பில் தவறவிட்டவற்றை பேரப்பிள்ளையில் சீர்செய்ய விரும்பினார். நாளையிலிருந்து தன் வெட்கத்தை உதறி எறிவதாக முடிவெடுத்தார். இரவிரவாக அதற்கான பயிற்சியிலும் இறங்கிப் பார்த்தார். ஆரம்பத்தில் கஸ்ரமாக இருந்தாலும் போகப்போகச் சரியாகும் என நம்பினார்.

விடிந்தது. ஆனால், தாத்தாவுக்கல்ல.

மகளும் மருமகனும் வேலைக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். சற்று தாமதாகிவிட அவர்களுக்குள் மெல்லிய உரசல் வந்தது. பேத்தி ஏதோ குழப்படி செய்திருக்கவேணும். மகள் எரிந்து விழுந்தாள். பேத்தி அழுதபடி ஓடிவந்து அம்மம்மாவின் மடிக்குள் வீழ்ந்தாள். தாத்தாவுக்கும் வலித்தது. தாத்தாவும் கிட்டப்போய் போய் பேத்தியை வருடிக்கொடுத்தார். தான் தூக்குவதற்கு ஆசைப்பட்டார். சைகையால் கேட்டார். மனைவி கொடுக்கவில்லை. அழுதுகொண்டிருந்த பேத்தியை இறுக கட்டி அணைத்தார்.

நீங்கள் தான் செல்லம் குடுத்துக் குடுத்து அவளைக் கெடுக்கிறது. உங்களோட இருந்து பிள்ளை வளக்கேலாது. கெதியில நாங்கள் வீடு பாத்துக்கொண்டு போறம் என்றபடி மகள் காரை நோக்கிப் போனாள். மனைவி பேத்தியை இறுக அணைத்தபடியே இருந்தார். தாத்தா தன் மகளை விறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றார்.

# அரபு வசந்தமாக ஆரம்பித்து முடிவின்றிய சிரிய போர்!

# சிரிய அதிபர் அசாத் மீது போர்க் குற்றம் சாத்தியமா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சிரியாவின் உள்நாட்டுப் போரில் மார்ச் 2011 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2022 ஆம் ஆண்டு வரை 4.76,600 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆனால், இது உண்மையான எண்ணிக்கை இல்லை என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் இயங்கும் போர் கண்காணிப்புக் குழு இதுவரை சிரிய போரில் 4,94,438 பேர் பலியாகியிருப்பதாக தெரிவித்துள்ளது.

போர் தொடங்குவதற்கு பல காலங்களுக்கு முன்பே, சிரியாவின் மக்கள் வேலையின்மை, அதிகம் பரவியிருந்த ஊழல் மற்றும் அரசியல் சுதந்திரமின்மை ஆகியவை அதிபர் அல்-அசாத்தின் ஆட்சியில் உள்ளது



கடந்த வாரம் சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றால் சிரிய அதிபர் அல்-அசாத்தை கைது செய்ய கோரப்பட்டது. சிரியாவின் உள்நாட்டுப் போர், சர்வதேச நாடுகளின் தலையீட்டால் பாரியளவில் உயிர் இழப்புக்களை சந்தித்தது. ஆயினும் இப்போரின் நிகழ்கால நிலவர உண்மையாக இப்போரில் எவரும் வெற்றியோ – தோல்வியடையவில்லை என்பதை உணர்த்துகிறது

குறித்து குற்றச்சாட்டுகளை வைத்தனர். தந்தை ஹஃபீஸிற்கு பிறகு, 2000ஆம் ஆண்டில், அதிபரானார் அல்-அசாத்.

சிரியா அதிபர் பஷர் அல்-அசாத்திற்கு எதிராக தொடங்கிய ஒரு போராட்டம், சில சர்வதேச நாடுகளின் தலையீட்டால் முழு உள்நாட்டுப் போராக உருவெடுத்தது.

### சிரியாவில் ஏன் போர் நடக்கிறது?

2011களில் அமைதியின்மை தொடரத் தொடர, போராட்டங்கள் பல வெடித்தன. முதலில் தற்காப்பிற்காகவும், பிறகு தங்கள் பாதுகாப்பு அதிகாரிகளை விரட்டி அடிக்கவும், எதிரணியை சேர்ந்தவர்கள் ஆயுதங்களை ஏந்தினர். அந்நிய சக்தியின் உதவிகளை பெற்றுள்ள பயங்கரவாதிகளை முழுமையாக நசுக்கி நாட்டின் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டு வருவேன் என்று அதிபர் உறுதிமொழி அளித்தார்.

இந்த வன்முறைகள் மிக விரைவிலேயே அடுத்த நிலைக்கு சென்று உள்நாட்டு போராக மாறியது. அரசின் படைகளை எதிர்கொள்வதற்காக, நூற்றுக் கணக்கான கிளர்ச்சியாளர்கள் அணிவகுத்தனர்.

இப்போரில் சிரிய அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் உதவின. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் ஆரம்பக்கட்டத்தில் பாரிய அளவில் கிளர்ச்சியாளர்களுக்கு உதவின. பின்னர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக துருக்கி மற்றும் சில அரபு நாடுகள் உதவி இருந்தன.

### 12ஆவது ஆண்டில் தொடரும் போர்

சிரிய நாட்டின் பெரிய நகரங்கள் அரசு காட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலும் சில நகரங்கள் தற்போதும் உள்ளன.

12 ஆண்டுகளாக நடக்கும் சிரிய போர் எப்போது முடிவுக்கு வரும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை. ஆனால் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை



மூலம் சிரிய போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தற்போது வரை தோல்வியே அடைந்துள்ளன. இந்த நிலையில் சிரிய அதிபர் பஷார் பதவி விலகல் ஒன்றையே கிளர்ச்சியாளர்கள் சிரிய போரை முடிவுக்கு கோரிக்கையாக வைக்கின்றனர். கிளர்ச்சியாளர்களின் இந்தக் கோரிக்கையை பஷார் ஏற்கத் தயாராக இல்லை.

அதேவேளை சிரிய போரை முடிவுக்கு கொண்டுவர துருக்கி உள்ளிட்ட நாடுகள் எடுத்த முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இந்த நிலையில்தான் சிரிய உள்நாட்டுப் போர் பன்னிரண்டாவது ஆண்டில் நுழைந்திருக்கிறது. அதிகாரத்திற்காக தொடங்கப்பட்ட சிரிய போர் இன்னமும் தொடர்கிறது.

### சிரியாவில் ஒரு போர்க்களம்

அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்த போரில் முக்கிய விடயங்களாக அமைந்தன. அதிபரின் ஆதரவு மற்றும் எதிர் படைகளுக்கு, இந்நாடுகள் அளித்த ராணுவ, பொருளாதார, அரசியல் உதவிகள் இப்போர் தீவிரமடையவும், தொடரவும் வழிவகுத்தன.

இதுவே பிற்காலத்தில், சிரியாவை ஒரு போர்க்களமாக மாற்றியது.

சிரியாவில் டெர்ரா நகரின் தெற்குப்பகுதியில், 2011ஆம் ஆண்டின் மார்ச் மாதம், அரபு வசந்தத்தால் ஈர்க்கப்பட்ட, ஜனநாயகத்தை முன்னிறுத்திய ஒரு கண்டன போராட்டம் நடைபெற்றது. இத்தகைய போராட்டங்களை செய்வோரை நசுக்க, அரசு தனது படைகளை பயன்படுத்த, அதிபர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, நாடு முழுவதும் போராட்டங்கள் தொடங்கின. சிரிய அதிபரின் ஆதரவுப் படைகளுக்கும், எதிரானவர்களுக்கு இடையிலான போர் என்ற வடிவத்தை தாண்டி மனிதாபிமான பேரழிவை இந்த போர் தாண்டியுள்ளது.

### ரஷ்யாவின் தலையீடு

சிரிய அதிபருக்கு ஆதரவாக செயல்படும் ரஷ்ய அரசு, 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சிரியா அரசை நிலையாக வைப்பதற்காக விமான தாக்குதல்களை முதலில் தொடங்கியது. பயங்கரவாதிகள் மட்டுமே குறிவைக்கப்படுவார்கள் என்று ரஷ்யா தெரிவித்தபோதிலும், அதன் தொடர் தாக்குதல் என்பது, அமெரிக்க மேற்கத்தியர்களின் ஆதரவை பெற்றிருந்த கிளர்ச்சியாளர்கள் மீதும், பொதுமக்கள் வசித்த இடங்களிலும் நடந்ததாக மனித உரிமை செயல்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

ரஷ்யாவின் இந்த தலையீடு என்பது, போரின் திசையை சிரிய அதிபருக்கு ஆதரவாக மாற்றியது. 2016ஆம் ஆண்டின் பின்னாட்களில், கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த கிழக்கு அலெப்போவில் ரஷ்ய விமானப்படையின் தாக்குதல் அதிகமாக இருந்தது.

பிறகு 2017ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில், ரஷ்யாவின் சிறப்பு படையினர் மற்றும் பிற குழுக்களின் இணைந்த தொடர் தாக்குதல், டேர் அல்-சோர் நகரில் இருந்த ஐ.எஸ் குழுவின் உறுதியான கட்டுப்பாட்டை உடைத்தது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், ரஷ்ய படைகளின் சில பிரிவை பின்வாங்கிக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். ஆனால், சிரியா முழுவதும் அவர்கள் தொடர்ந்து விமானப் படை மூலம் தாக்குதல்கள் நடத்தினர்.

### போரின் தாக்கம் என்ன?

இங்கிலாந்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் கண்காணிப்பு குழுவான, மனித உரிமைகளுக்கான சிரியாவின் ஆய்வகம், வெளியிட்ட அறிக்கையில், சிரியாவில் 4.76,600 பேர் இறந்துள்ளதை ஆவணப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது. இதில் 1,03,000 பேர் பொதுமக்கள். இந்த கணக்கெடுப்பில், காணாமல் போயிருக்கலாம், இறந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்ட 56,900 பேர் சேர்க்கப்படவில்லை என்பதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்த விவகாரத்தால் 4.7லட்சம் மக்கள் இறந்துள்ளதாக மனித உரிமைகள் குழு கணக்கிட்டது. ஐ.நாவின் கணக்கின்படி 5.6 மில்லியன் மக்கள் சிரியாவிலிருந்து வெளியேறியுள்ளனர். அதில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள். சமீபகால வரலாற்றிலேயே இல்லாத அளவிலான இந்த புலம்பெயர்தலை சமாளிக்க, அருகாமை நாடுகளான லெபனான், ஜோர்டான் மற்றும் துருக்கி ஆகியவை திணறின.

சிரியா அகதிகளில் 10சதவிகிதம் பேர் பாதுகாப்பான முறையில் ஐரோப்பாவில் தஞ்சம் சேர்ந்தனர். மேலும் 6.1 மில்லியன் மக்கள் தங்கள் நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். 2018இல், சிரியாவினுள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் 13.1மில்லியன் மக்களுக்கு உதவ 3.5பில்லியன் தொகை தேவைப்படும் என ஐ.நா கணக்கிட்டது.

கிட்டத்தட்ட 70 வீத மக்கள் மிகவும் கொடுமையான வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். விலைவாசி மற்றும் உணவுத்தட்டுபாட்டால் ஆறு மில்லியன் மக்கள் உணவில்லாமல் இன்னமும் தவிக்கின்றனர். சில பகுதிகளில் உள்ள மக்கள் தங்களில் 15 முதல் 20 சதவிகித வருவாயை குடிநீரிற்காக செலவிடுகிறார்கள்.

மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு உதவிகள் சென்று சேர முடியாத நிலையை போரில் ஈடுபட்டுள்ள குழுக்கள் உருவாக்கியுள்ளன. சுமார் 2.98 மில்லியன் மக்கள் உதவிகள் சென்றடைய முடியாத பகுதிகளில் உள்ளனர்.

### போர் முடிவுக்கான நடவடிக்கைகள்

அரசியல் ரீதியான முடிவு மட்டுமே இந்த போருக்கு தீர்வாக இருக்கும் என்று சர்வதேச சமூகம் பல காலங்களுக்கு முன்பு முடிவு செய்தது. ஐநாவின் பாதுகாப்புக்குழு, 2012 ஜெனிவா குழுவை அமலாக்க அழைப்பு விடுத்தது. இந்த குழுவானது இருதரப்பின் கவனத்துடன் உருவாக்கப்பட்ட நிர்வாகக் குழுவாகும். 2014ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த ஜெனிவா 2 என்ற அமைதி பேச்சுவார்த்தைக்கான மத்தியஸ்தராக ஐ.நா செயல்பட்டது. ஒன்பது குழுக்களாக இந்த பேச்சுவார்த்தை நடந்தது.

அரசியலமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை கொண்டுவரவும், சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்தவும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சிறிய அளவிலான முன்னேற்றமும் ஏற்பட்டது.

போர்க்களத்தில் பல இடங்களில் பின்வாங்கிய போதும், பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, தொடர்ந்து அதிபர் பதவி விலக வேண்டும் என்று கேட்கப்பட்டு வந்ததால், இந்த பேச்சுவார்த்தைகளின் மீது ஆர்வமில்லாதவராக இருந்தார் அதிபர் அசாத்.

அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு இந்த போரில் முக்கிய பங்காளிகளாக அமைவதால் போரின் தீவிரம் தணிந்தாலும் , போர் இன்னமும் முடிவுறவில்லை.



# கல்முனையில் இலவச மருத்துவ முகாம்

நிந்தவூர், ஒக. 06

இலங்கை மார்க்கய சகோதரத்துவ (ஐக்கிய) அமைப்பும், கொழும்பு மெகா சிற்றி லயன்ஸ் கழகமும் இணைந்து கல்முனையில் இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தியது.

கல்முனை நகர லயன்ஸ் கழகம் மற்றும் கல்முனை பரலோகவாசல் தேவ சபை என்பன இணைந்து இலவச சிகிச்சை முகாமுக்கான சிறப்ப ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

கல்முனை பரலோக வாசல் தேவ சபை இளைஞர் மண்டபத்தில் வறிய மக்களுக்குப் பெரும் பயனளிக்கும் வகையில் இடம்பெற்ற இந்த இலவச வைத்திய சிகிச்சை முகாமில் தென்கொரியாவைச் சேர்ந்த வைத்தியக் குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

சிகிச்சை முகாமுக்கான சிறந்த ஏற்பாடுகளை கல்முனை பரலோக வாசல்தேவ சபையின் போதகர் ஏ.கிருபைராஜா, கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் பொறியியலாளர் லயன். எஸ்.சுதர்சன் ஆகியோர் தலைமையிலான குழுவினர் செய்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதிப்பணிப்பாளர் டாக்டர். எம்.பி. அப்துல் வாஜித், கொழும்பு மெகா சிற்றி லயன்ஸ் கழகத் தலைவர் லயன். சந்திர குலவன்ஸ, கல்முனை நகர லயன்ஸ் கழகத்தலைவர் பொறியியலாளர் லயன். எஸ். சுதர்சன் உட்பட தென் கொரிய முக்கியஸ்த்தர்களும் கலந்து கொண்டனர். (அ-06)

# மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்களுக்கு பிரான்ஸில் அஞ்சலி

பாரிஸ், ஒக. 06

மூதூரில் இனப்படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்களை நினைவு கூரும் நிகழ்வு பிரான்ஸில் இடம்பெற்றது.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி மூதூரில் நடந்த படுகொலைச் சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் படுகொலை செய்யப்பட்டு 17 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

உயிர் நீத்த பணியாளர்களை நினைவு கூரும் நிகழ்வு பிரான்ஸ் கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் பிரான்ஸ், கிளிச்சி பகுதியில் அமைந்துள்ள உயிர் நீத்த பணியாளர்களின் நினைவுத்தூபிக்கு முன்னால்



இடம்பெற்றது.

“2006ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று மூதூரில் உள்ள அக்ஷன் பாம் அலுவலகத்திற்கு சென்ற குறித்த 17 பணியாளர்களும் யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்தனர்.

இந்நிலையில்,ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதியன்று குறித்த 17 பணியாளர்களும் அலுவலகத்திலேயே படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இறக்குமதி செய்த முட்டைகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக. 06

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல முட்டைகளையும் பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரச வணிக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

நாளாந்தம் ஒரு மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அவர்



குறிப்பிட்டார்.

எனினும், குறித்த முட்டைகளை வெதுப்பக மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்காக வழங்க முடியாதென அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அடுத்த வாரம் முதல், சகல பல்பொருள் அங்காடிகளிலும் பொதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்படுவதாக அரச வணிக கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். (அ)






# அதிபர் சேவை தரம் மூன்றில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

கொழும்பு, ஓக. 06

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக புதிய போட்டி பரீட்சைகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் மூன்றிற்கு புதிய நியமனங்களை வழங்குவது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று முன் தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஜனக்க டி சில்வா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் அடங்கிய ஆயம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன் இந்த விடயத்தை மன்றில் கூறினார்.

அத்துடன் குறித்த மனுக்கள் தொடர்பில் சமாதான யோசனையை முன்வைக்க முடியும் எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இதற்கமைய அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுகளை நடத்தி உரிய நியமனங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்து ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் பரீட்சைகளை நடத்த முடியும் எனவும் உரிய விடைத்தாள் மதிப்பீடுகள் செய்யப்பட்ட பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நேர்முகத் தேர்வுகளை நடத்த முடியும் எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் உயர்நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளார்.

# விமான நிலையங்களுக்கு அருகில் பட்டங்களைப் பறக்கவிடத் தடை!

கொழும்பு, ஓக. 06

நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் பட்டங்களை பறக்கவிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை சுற்றி 5 கிலோமீற்றர் எல்லைக்குள் 300 அடிக்கு அப்பால் காற்றில் பட்டம் பறக்கவிடுவது அல்லது விமானத்தின் செயல்பாடுகளுக்கு இடையூறாக பட்டம் பறக்கவிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனை பொருட்படுத்தாமல் யாரேனும் ஒருவர் செயல்பட்டால், அவ்வாறானவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

(அ)

# சகல பிரச்னைகளுக்கும் தீர்வு வழங்குவார் ரணில்

## மனுஷ நாணயக்கார நம்பிக்கை

கொழும்பு, ஓக. 06

**நாட்டிலுள்ள சகல பிரச்னைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொடுத்ததன் பின்னர் இன்னுமொரு தலைவரிடம் நாட்டை ஒப்படைக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எத்தனை முனைகளில் போட்டி ஏற்பட்டாலும் நாட்டு மக்களின் தேவைக்காக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப் படுவார். அரசியல் நோக்கங்கள் வேறாக இருந்தாலும் நாட்டின் முன்னேற்றத்துக்காக கட்சி பேதமின்றி சகலரும் ஒன்றுப் பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாக நியமித்து நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கி எந்தவொரு கட்சியும் அரசியல் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளார்.



30 வருடகாலம் யுத்தம் உள்ளிட்ட நாட்டிலுள்ள பிரச்னைகளை இன்னுமொரு ஜனாதிபதியிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தயாராக இல்லை. இந்த பிரச்னைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் ஜனாதிபதிக்கு விருப்பமில்லை. அதற்காகவே கலந்துரையாடி தீர்வொன்றை எடுக்குமாறு நாங்கள் கோருகிறோம்-என்றார். (அ)

# பாதாள உலகக் குழுவை ஒழிப்பதற்கு விசேட குழு!

கொழும்பு, ஓக. 06

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒழிப்பதற்காக பொலிஸ்மா அதிபரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் ஆலோசனைக்கு அமைய இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இந்த விசேட குழு நியமிக்கப் பட்டுள்ளது.

பாதாள உலகக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களை பொலிஸ் தலைமையகம் மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சுக்கு அறிவிப்பதற்கான கடப்பாடு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அவசர மருந்து கொள்வனவை முற்றாக நிறுத்த நடவடிக்கை

கொழும்பு, ஓக. 06

அவசர மருந்து கொள்வனவை எதிர்வரும் சில மாதங்களில் முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள மருந்து தேவைப்பாட்டை நிவர்த்தி செய்துகொள்ளும் நோக்கத்தில் மாத்திரம் அவசர மருந்து கொள்வனவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஔடத ஒழுங்குப்படுத்துதல் அதிகார சபையில் இருக்கம் குறைப்பாடுகள் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும், இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்குள் இடம்பெறும் பிரச்னைகள் முழுமையான நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

(அ)



காலஞ்சென்ற பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய
சுந்தரம் டிவகலாலா அவர்களின் நினைவாக
ஒழுங்கு செய்யப்பட்டுள்ள

"மனிதம்"

டொக்டர் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களின்
அருஸ்ரீ கலை அரங்கத்தின்
கருப்பொருள் நாட்டிய நிகழ்வு



காலம்: 16.09.2023
நேரம்: மாலை 5 மணி
இடம்: ஹீவர் மண்டபம், மருத்துவ பீடம்,
கொக்குவில்

சிறுநீரக நாள் பராமரிப்பு சத்திர சிகிச்சைக் கூடம்,
பல்கலைக்கழக சத்திர சிகிச்சைப் பிரிவு,
யாழ் போதனா வைத்தியசாலை.
நிதி உதவி நிகழ்வு

இலக்கை அடைய அனைவரது ஆதரவையும் அன்பளிப்பையும்
வேண்டி நிற்கின்றோம்!

நுழைவுச் சீட்டுகள் கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மருத்துவபீடம்

-அமைப்பாளர் -
0776610761

லிட்டில் எய்ட் திறன்விருத்தி மையத்தின் ஏற்பாட்டில்
மாபெரும் தொழிற்கண்காட்சியும் – மலிவு விற்பனையும்..
திகதி :- 06.08.2023 (ஞாயிற்றுக்கிழமை)

இடம் :- லிட்டில் எய்ட் திறன்விருத்தி மைய பிரதான வளாகம்
(கனகராசா வீதி , திருநகர், கிளிநொச்சி)
நேரம் :- காலை 09.00 மணி முதல் மாலை 5 மணி வரை

கண்காட்சி மற்றும் விற்பனைப்பொருட்கள்
- கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்பட்ட மட்பாண்டப்பொருட்கள்
- பனைசார் உற்பத்திகள்
- உள்ளூர் பாதணிகள்
- உணவு வாசனை உற்பத்திகள் (மிளகாய் தூள், மஞ்சள்தூள், அரிசி மா.)
- ஐஸ்கிறீம்
- அலங்கார கைவினைப்பொருட்கள்



போன்றவற்றை தரமான விதத்திலும் – உற்பத்தியாளர்களிடம் இருந்தும் நேரடியாக கொள்வனவு செய்ய முடியும்

குடும்பமாய் வாரீர் : மலிவான விலையில் பொருட்களை கொள்வனவு செய்வீர் !
நமது கிளிநொச்சி மாவட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு உங்களுடைய ஆதரவை தாரீர் !

தொடர்புகளுக்கு
077-7378556

## யாழ்....

ஆலயத்தை நோக்கி பேரணி இடம்பெற்றது.

போராட்டத்தின் போது தொல்லியல் திணைக்களத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் மாணவர்கள் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மத குருமார்கள், சைவ அமைப்புக்கள், சிவில் அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## தமிழர்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரது இந்திய விஜயத்தின் பின்னர், 13ஆவது திருத்தச் சட்ட விடயத்தில் விரைவான முடிவுகளை எடுக்கவுள்ளதாக அறிவித்து, அதனடிப்படையில் வேகமாக செயற்பட்டு வருகின்றார். இந்த பின்புலத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் கட்சிகளின் பரிந்துரைகளை கோரியிருக்கின்றார். உண்மையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் புதிதான பரிந்துரைகள் தேவையற்றது - ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் ஒரு அங்கமாகும்.

இவ்வாறானதொரு சூழலில், ஜனாதிபதி பரிந்துரைகளை கோருவதானது, 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களையும் பலவீனப்படுத்துவதற்கே வழிவகுக்கலாம். ஏனெனில், தென்னிலங்கை கடும்போக்குவாத கட்சிகள், 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடாதென்று வாதிட்டு வருகின்றன.

இந்த நிலையில் பெரும்பான்மையான கட்சிகள் பொலிஸ் அதிகாரத்துக்கு எதிராகவே தங்களின் பரிந்துரைகளை முன்வைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதனடிப்படையில் பொலிஸ் அதிகாரமில்லாத மாகாண சபை முறைமையை, தமிழ் மக்களுக்கான தீர்வாக முன்தள்ளும் முயற்சிகள் இடம்பெறலாம். இதனை தமிழ்க் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன?

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையான இலக்கு- வடக்கு கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவதாகும்.

இந்த அடிப்படையில்தான், தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட, தமிழ் விடுதலை இயக்கங்கள், இந்தியாவின் வேண்டுகோளுக்கு அமைவாக, தங்களின் ஆயுதங்களை ஒப்படைத்தன. ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்டனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை குறிப்பிடத்தக்க வகையில் உறுதிப்படுத்தும் என்னுமடிப்படையில்தான், இந்தியாவின் வேண்டுகோளை அனைவருமே ஏற்றுக்கொண்டனர். இதன் மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை, கடப்பாட்டை இந்தியாவிடம் ஒப்படைத்தனர். ஆனால் தற்போது பொலிஸ் அதிகாரத்தை நிரந்தரமாக இல்லாதொழிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதான தோற்றம் தெரிகின்றது. இந்த நிலையில் முன்னாள் விடுதலை இயக்கங்கள், மிதவாத கட்சிகள் அவைரும் ஓரணியில், இந்த விடயத்தை, இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா அரசாங்கம் மற்றும் தமிழ் நாட்டின் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இது மிகவும் அவசரமான பணியாகும். அனைத்தும் பறிபோன பின்னர், வெறும் அறிக்கைகளை வெளியிடுவதில் பயனில்லை- என்றுள்ளது. (அ)

## சங்கமித்தை...

எதிரே நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

“இதன் போது சங்கமித்தை வரவும் இல்லை, அரச மரம் நடவும் இல்லை” உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

இப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , செல்வராசா கஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## யாழ்நிலா...

இந்த ரயில் சேவை முன்னெடுக்கப் படுகின்றது.

அத்துடன், பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு காங்கேசன் துறையில் இருந்து கல்கிஸை நோக்கி இந்த ரயில் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு பின்னர் நல்லூர் கோவில் மகோற்சவ திருவிழா காலத்தை முன்னிட்டு தினமும் இந்த ரயில் சேவை நடத்தப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தினமும் ரயில் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் பந்துல குணவர்தனவிடம் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரணிலுக்கு...

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, கூட்டணி தொடர்பில் அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் டிரான் அலஸ் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளதுடன், கூட்டமைப்பின் எதிர்கால விவகாரங்கள் குறித்து ஆராயும் விசேட சந்திப்பொன்று அண்மையில் கொழும்பிலுள்ள அமைச்சர் மகிந்த அமரவீரவின் இல்லத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசியல் கூட்டணியின் பிரசாரம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பிரதேச அமைப்பாளர்கள் அழைக்கப்பட்டு மாவட்ட மட்டக் கூட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் கம்பஹா மாவட்டத்தை இலக்கு வைத்து முதலாவது கூட்டம் நடத்தப்பட்டதுடன், அந்த மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட அமைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்படி அடுத்த சில மாதங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூட்டணியின் தலைவர்கள் அனைத்து மாவட்டங்களின் அமைப்பாளர்களையும் சந்தித்து உரிய வேலைத்திட்டம் தொடர்பில் தெரியப்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மற்றும் மொட்டுக் கட்சியின் உயர் மட்ட உறுப் பினர்களுக்கும் இடையே முரண்பாடு உருவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சியில் இருந்து விலகியவர்களை இணைத்து புதிய அரசியல் கூட்டணியை அமைக்க நிமல் லான்சா திட்டமிட்டுள்ளமையே நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக அறியமுடிகிறது.

இதேவேளை, ஜனாதிபதியின் விசேட செயற்றிட்டங்களுக்கு நிமல் லான்சா பொறுப்பேற்றுள்ளதுடன், அவருக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து அலுவலகம் மற்றும் பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# யாழில் ரயிலில் மோதுண்டு இளம் குடும்பப் பெண் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 06

யாழ்ப்பாணம், புங்கன்குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் மோதி இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிழந்துள்ளார்.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த திலீபன் பிரியா (வயது 27) எனும் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று மதியம் கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் மோதியே குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

எனினும், பெண்ணின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## நியாயமற்ற...

அதிகரிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

500 ஜிகாவாட் மணித்தியாலங்கள் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் வேறு விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணத்திற்கான நிதியைப் பெற்றுக்கொள்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ள 33 பில்லியன் ரூபா நட்டத்தை தவிர்த்தல் ஆகிய மூன்று காரணிகளே மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த அனைத்து காரணிகளையும் தரவுகளின் அடிப்படையில் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிராகரித்துள்ளார்.

நியாயமற்ற முறையில் இலாபமீட்டஇடமளிப்பது தமது ஆணைக்குழுவின் பொறுப்பல்ல என்பதன் காரணமாக மின் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி வழங்க முடியாது என இலங்கை மின்சார சபைக்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த 28 ஆம் திகதி அறிவித்துள்ளது. (அ)

## இலங்கை...

இலங்கைக்கும் இடையிலான பொருளாதார ஒருங்கிணைப்பு ஏற்பட்டவுடன், அதில் வேறு எவருக்கும் சந்தர்ப்பம் இருக்கும் என தாம் கருதவில்லை எனவும் இலங்கை தூதுவர் நேர்காணல் ஒன்றில் தெரிவித்ததாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் புதிய திட்டங்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்களுக்கான முதலீடுகளில் தனியார் துறைக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் யோசனை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் இந்திய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்தும் இலங்கைத் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பிரதான வைத்தியசாலை மற்றும் ஹில்டன் ஹோட்டல் ஆகியவற்றை மறுசீரமைக் கும் இலங்கை அரசாங்கத்தின் திட்டங் களும் இந்தியாவின் தனியார் துறைக் கான வாய்ப்புகளை வழங்குவதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளினதும் மின்சார கட்டமைப்புகளை கடலுக்கு அடியில் இணைப்பதற்கான மிகவும் சிக்கனமான மற்றும் சிறந்த வழியைத் தீர்மானிப்பது தொடர்பிலான தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். (அ)

## இம்ரான்கானுக்கு...

சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட இம்ரான் கானுக்கு ஊழல் குற்றச்சாட்டில் மூன்றாண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றம் அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்தது. குற்றச்சாட்டை மறுத்துள்ள இம்ரான் கான், மேல்முறையீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

அவரை உடனடியாக கைது செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ள நிலையில், முன்னாள் பிரதமர் லாகூரில் உள்ள அவரது வீட்டில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இம்ரான் கான் 2018 ஆம் ஆண்டு பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். எனினும், கடந்த ஆண்டு அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு பதவி நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 2010இற்கு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சுழிபுரத்தில் போராட்டமொன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தமிழர்கள் வாழும் இடங்களைச் சிங்களமயப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் யுத்தத்தின் மூலமாக தமிழர்களை அழித்து நிலங்களைப் பறித்து இங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

யுத்தத்தில் இனப்படுகொலையை செய்தார்கள் என சர்வதேச ரீதியில் குற்றச்சாட்டை எதிர்கொள்கின்றனர். இந்த நேரத்தில் வடக்கு-கிழக்கிலுள்ள சைவ சமய அடையாளங்களை பௌத்த அடையாளங்களாக நிலைநிறுத்தி சிங்கள பௌத்த நாடு என நிரூபிக்க நினைக்கின்றனர்.

அந்த முயற்சியின் ஒரு கட்டமாக பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரம் சங்கமித்தை காலத்தில் நடப்பட்டதாகப் புனைந்து செய்தியைப் பரப்புகின்றனர். அதற்கெதிரான போராட்டமாகவே இது இடம்பெறுகின்றது.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் 83 இடங்களில் விகாரையைக் கட்டியுள்ளனர். தற்பொழுதும் இந்த இடத்தில் பௌத்தம் இருந்ததாக கூறி சிங்கள பௌத்தமாக அடையாளப்படுத்த முனைகின்றார்கள். இங்கு தமிழ் பௌத்தம் இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு.

விஜயன் இலங்கைக்கு வர முன்னரே இலங்கையில் பஞ்ச ஈச்சரங்கள் காணப்பட்டன. வரலாற்று வழியாக சிவனை வழிபடும் நாடாக இருந்ததால்தான் திருமூலர் சிவபூமி என இந்த நாட்டை வர்ணித்துள்ளார்.

உண்மையைச் சொன்ன வரலாற்றாசிரியர்களை புறக்கணித்து பொய்களைப் புனைந்து பொய்களுக்கூடாக இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களை பூர்வீகக் குடிகள் இல்லை என்பதை வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்த ஆலயத்தில் 1768 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதியில் எந்தவிதமான அரசமரமும் இருந்ததாக இல்லை. இதை சர்வதேச சமூகத்திடம் கொண்டு செல்வதற்கும் இது தொடர்பான போராட்டங்களை முன்னெடுப்ப தற்கும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்ற வகையில் நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு முழு முயற்சிகளை மேற்கொள்வோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கடுமையான நிதி நெருக்கடியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்!

## 23 ஆயிரத்து 800 கோடி ரூபாய் கடன்

கொழும்பு, ஓக. 06

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட எரிபொருளுக்கு இலங்கை மின்சார சபையும் சிறிலங்கன் விமான சேவையும் இருபத்து மூவாயிரத்து எண்ணூறு கோடி ரூபாவை செலுத்தத் தவறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நிதிப் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் (2023) இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதி தேங்கியுள்ளமையின் காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை நடத்துவதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபையின் நிதி நிலைமை நலிவடைந்துள்ளதால் இந்த பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் அரசாங்கத்திற்கு 69 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்கு 25 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், இலங்கை வங்கிக்கு 2600 மில்லியன் ரூபாவையும் செலுத்த வேண்டியிருந்ததாக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் இறக்குமதிக்கு வசதியாக பயன்படுத்தப்படும் 69 மில்லியன் அமெரிக்க டொலர் இந்தியக் கடன் வசதியைத் தீர்ப்பதில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் மூலோபாயத்தால் நிதிப் பிரச்னை தீர்க்கப்படும் என நம்புவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்சார சபைக்கு நாமல் தரப்பு கடிதம்

கொழும்பு, ஓக. 06

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளரினால் இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாமலின் திருமணத்தின்போது செலுத்தப்படாத மின் கட்டணம் தொடர்பாக இலங்கை மின்சார சபை வழங்கிய பட்டியல் தொடர்பில் கடிதத்தில் தகவல் கோரப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு சமூக வலைத்தளங்களில் கடிதம் பகிரப்பட்டு வரும் நிலையில், அவ்வாறானதொரு பட்டியல் மின்சார சபையினால் வழங்கப்பட்டதா என கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறு மின் கட்டணப் பட்டியல் ஒன்று வழங்கப்பட்டிருக்குமாயின், அது யாருடைய பெயருக்கு, எப்போது, எந்த முகவரிக்கு வழங்கப்பட்டது எனவும் அந்த கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

குறித்த மின் கட்டணப் பட்டியல் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குமாறு அந்த கடிதத்தின் ஊடாக நாமல் சார்பில் அவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# கோழி, பால் பண்ணைகளில் வெளிநாட்டவர்கள் முதலீடு!



கொழும்பு, ஓக. 06

நாட்டில் முட்டை உற்பத்தி மற்றும் கோழிப் பண்ணை துறையில் முதலீடு செய்வதற்கு இரண்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்தியாவின் இரண்டு முதலீட்டாளர்கள் இவ்வாறு முதலீடு செய்ய முன்வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த முதலீடு தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும், அவர்களது திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுமாயின், முதலீட்டாளர்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

முட்டை மற்றும் கோழி இறைச்சியை உள்நாட்டில் உற்பத்தி செய்வதையே தாம் விரும்புவதாகவும், அதனை இலங்கையர்கள் முன்னெடுத்தால் அதனை வரவேற்பதாகவும் கூறிய மகிந்த அமரவீர, வேறு நாடுகளில் இருந்து முட்டை மற்றும் கோழிப்பண்ணை துறையில் முதலீடு செய்வதற்கு விரும்பினால் அது குறித்தும் ஆராயப்படும் என குறிப்பிட்டார்.

பால் உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதற்கும் இந்திய முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், முட்டை, கோழி இறைச்சி மற்றும் பால் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரித்து, அவற்றை ஏற்றுமதி செய்வதே தமது இலக்காக காணப்படுவதாகவும் தற்போதும் குறிப்பிட்ட அளவு அவை ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 161 அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு முற்பதிவு!

கொழும்பு, ஓக. 06

161 அத்தியாவசிய மருந்து வகைகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அவை நாட்டுக்குக் கிடைக்கும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தற்போது, 850 மருந்துகள் அத்தியாவசிய மருந்துகளாக பெயரிடப்பட்டுள்ளன. அவற்றில் 260 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சர் கூறினார்.

எதிர்வரும் காலங்களில் அவற்றையும் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ஐ)

# கட்சியின் பிரச்னைகளைத் தீர்க்க சாகரவுக்கு 3 மாத கால அவகாசம்

கொழும்பு, ஓக. 06

பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சி பிரச்னைகள் அனைத்தையும் மூன்று மாதங்களுக்குள் தீர்க்க வேண்டும் என அந்த கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள், கட்சியின் பொதுச் செயலாளரான சாகர காரியவசத்துக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

பொதுஜன பெரமுனவின் சுமார் 70 தொகுதி அதிகார சபைக்கூட்டங்கள் இதுவரை நடத்தப்பட்டுள்ளதாகவும் ஆரம்பத்தில் இருந்ததைவிட இறுதியாக நடைபெற்ற அதிகார சபைக்கூட்டத்தில் மக்கள் அதிகளவில் கலந்துகொண்டதாகவும் கட்சிக்குள் தொடர்ந்தும் பிரச்னைகள் நீடித்தால், கிடைத்து வரும் மக்களின் ஆதரவு இல்லாமல் போகலாம் என்பதால், உடனடியாக பிரச்னைகளுக்கு முடிவு காணுமாறு கட்சியின் தலைவர்கள், பொதுச் செயலாளருக்கு அறிவித்துள்ளனர்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை முடிவுக்கு கொண்டு வந்து முதலில் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படப்போகும் வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாட வேண்டும் எனவும் ஆனால் கட்சியின் வேட்பாளரையோ, பொது வேட்பாளரையோ தற்போதே பெயரிடக்கூடாது எனவும் சிரேஷ்ட தலைவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர் எனப் பேசப்படுகிறது.

பொதுஜன பெரமுனவில் சுமார் 125 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்து வருகின்றனர். இவர்களில் சிலர் வேறு கட்சிகளில் மற்றும் அணிகளில் இணைவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அப்படி எதுவும் நடக்கக்கூடாது எனவும் கட்சியினர் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் எனவும் சிரேஷ்ட தலைவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் விவரமான அறிக்கை கட்சியின் தலைவரான மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவேண்டும் எனவும் கட்சியின் பிரச்னைகள் குறித்து அவருடன் கலந்துரையாடவேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் அடுத்த தேர்தல் நடத்தப்படும் வரை கட்சியின் பாராளுமன்ற பெரும்பான்மையை பாதுகாப்பது அனைவரதும் கடமை எனவும் பெரும்பான்மையை இழந்தால், முன்னதாகவே தேர்தலை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அது கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் சிரேஷ்ட தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)



# ஐக்கிய தாதியர் சங்கத்தால் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 06

உயர்தரத்தில் கலைப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தாதியர் நியமனம் வழங்குவது தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனை உடனடியாக மீளப் பெறப்பட வேண்டுமென அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த பிரேரணை அமுல்படுத்தப்பட்டால் நாடளாவிய ரீதியில் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் அபாயம் உள்ளதாக அதன் தலைவர் முருதெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

தாதியர் பற்றாக்குறை ஏற்பட்டாலும் கலைத்துறையில் கல்வி கற்றவர்களை தாதியர் தொழிலில் இணைத்துக் கொள்வது அதற்கான தீர்வு அல்ல என முருதெட்டுவே ஆனந்த தேரர் கூறினார்.

குறித்த பிரேரணை அமுல்படுத்தப்பட்டால் நாடளாவிய ரீதியில் தாதியர்களினால் போராட்டம் நடத்தப்படும் என ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# திரிபோஷ உற்பத்தி நடவடிக்கை அடுத்த மாதம் முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 06

ஆறு மாதம் முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கு திரிபோஷ வழங்க அடுத்த மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு உள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆறு மாதம் முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கான திரிபோஷ தயாரிப்பில் இருக்க வேண்டிய அப்லாடாக்சிகோசினின் அளவு தொடர்பான பிரச்னையால் ஒரு வருடத்திற்கு மேல் நிறுத்தப்பட்டதாக திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் பல அதிகாரிகளின் இழுபறி காரணமாக இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியாமல் நீடிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பான நீண்ட கால கலந்துரையாடல்கள் தற்போது வெற்றிகரமான மட்டத்தில் இருப்பதாகவும், இம்மாத இறுதியில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்படி, ஆறு மாதம் முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கு தேவையான மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் திரிபோஷ பொதிகளை வழங்குவதற்கான உற்பத்தி நடவடிக்கைகளை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க முடியும் என்று திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.